# சர்வவியாபி

MISSION PRESS 1840

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-113)

| 02-06-2019 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விகாரி வருடம் வைகாசி 19 | வருட சந்தா ₹150<br>தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|

| புத்தகம் 56 | இதழ் 21<br>பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com<br>e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/<br>2334360 | ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோணி ரோச் |
|---|---|---|---|---|


# மேதகு பேராயர் S. மைக்கேல் அகுஸ்தீன் ஆண்டகை அவர்களின் மணிமண்டபம்



நமது முன்னாள் பேராயர் மேதகு S.**மைக்கேல் அகுஸ்தீன்** ஆண்டகை அவர்களின் சொந்த ஊரான கோவிலானூரில் அவரது உறவினர் அருட்திருதந்தை R.**ஜோசப்ராஜ்**, உயர் மறை மாவட்ட கல்வி செயலர், மற்றும் அவரது குடும்பத்தினரின் பெருமுயற்சி யினால் அழகுற எழுப்பப்பட்டுள்ள "**மேதகு பேராயர்** S. **மைக்கேல் அகுஸ்தீன் அவர்களின் மணிமண்டப**"த்தை கடந்த 22-5-2019 புதன் அன்று, நமது **பேராயர் மேதகு அந்தோணி ஆனந்தராயர்** அவர்கள் தம் திருக்கரங்களால் திறந்து வைத்து முன்னாள் பேராயர் அவர்களுக்கு அர்ப்பணித்தார்.



முன்னதாக அன்று மாலை 5.45 மணிக்கு பேராயர்கள், ஆயர்கள், குருக்கள், அருட் சகோதரிகள் மற்றும் இறைமக்கள் அனைவரும், அருட்கன்னியர் இல்லத்தின் அருகிலிருந்து மணிமண்டபம் நோக்கி பவனியாக சென்றனர். நமது பேராயர் அவர்கள் ரிப்பன் வெட்டி மணிமண்டபத்தைத் திறந்து வைத்தார். சென்னை-மயிலை முன்னாள் பேராயர் அவர்கள் மணிமண்ட பத்தில் அமைக்கப் பட்டுள்ள முன்னாள் பேராயர் S.**மைக்கேல் அகுஸ்தீன் அவர்களின் மார்பளவு உருவச் சிலையைத் திறந்து வைத்தார்**;



சேலம் ஆயர் மேதகு சிங்கராயர் அவர்கள் சிலைக்கு மாலை அணிவித்தார்; வேலூர் ஆயர் மேதகு **சவுந்தரராஜ்** அவர்கள் திரு இருதய ஆண்டவர் சுரூபத்துக்கு மாலை அணிவித்தார். தொடர்ந்து நமது பேராயர் மேதகு அந்தோணி ஆனந்தராயர் அவர்கள் செபித்து திரு இருதய ஆண்டவர் சுரூபத்தையும் முன்னாள் பேராயர் மேதகு S. மைக்கேல் அகுஸ்தீன் அவர்களின் மார்பளவு உருவச் சிலையையும் மந்திரித்தார். தொடர்ந்து மண்டப கல்வெட்டு வேலூர் ஆயர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது; செங்கல் பட்டு **ஆயர் மேதகு நீதிநாதன்** அவர்கள் நன்கொடையாளர் கல்வெட்டு திறந்து வைத்தார். தொடர்ந்து பொதுக் கூட்டம் நடைபெற்றது.



அருட்தந்தை R.**ஜோசப்ராஜ்** நிகழ்ச்சி களைத் தொகுத்து வழங்கினார். கோவிலானூர் பங்குதந்தை J. **ஆண்ட்ரூஸ்** அவர்கள் பேராயர்கள், ஆயர்கள் குருக்கள், துறவியர் மற்றும் இறைமக்கள் அனைவரையும் வரவேற்றார்.

நமது பேராயர் **மேதகு அந்தோணி ஆனந்தராயர்** அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மேதகுபேராயர் S. மைக்கேல் அகுஸ்தீன் அவர்கள் நம் உயர் மறைமாவட்டத்திற்கு கடவுளின் கொடையாக வழங்கப்பட்டவர், ஒரு மாபெரும் சொத்தாக விளங்கினார் என்றும், தாம் 1965-ல் பெங்களூரில் குருத்துவ பயிற்சியின் போது மேதகு மைக்கேல் அகுஸ்தீன் அவர்கள் பாரிசில் படிப்பு முடிந்து பெங்களூர் வந்தார் என்றும் அவரிடம் தாம் பயின்றதை பெரும் பேறாக கருதுவதாகவும் கூறினார். மேற் படிப்புக்குச் செல்லும்முன் ஓராண்டு பெத்தி செமினேர் பள்ளியில் பணியாற்றியதையும், ஆயராகவும் பேராயராகவும் முறையே சென்னை-மயிலை, வேலூர் மற்றும் புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டம் ஆகிய இடங்களில் பேராயராக அவர் ஆற்றிய அளப்பரிய பணிகளையும் எடுத்துரைத்தார் பேராயர் அவர்கள். அவருடைய செயல்பாடுகள் அவரது ஆன்மீகத்திலிருந்து வந்தது என்றும், அவர் **FIAT** - "**ஆகட்டும்**" என்ற அன்னை மரியாவின் வார்த்தையை தன் விருதுவாக்காக ஏற்று வாழ்ந்தவர்; கடவுளின் திருவுளத்தை மாதா நிறைவேற்றியது போலவே தம் வாழ்நாள் முழுதும் வாழ்ந்தார், மாதா போல் செபிக்கும் இதயம் கொண்டிருந்தார் என்றும் எடுத்துரைத்தார். பேராயர் வேலூர் ஆயராக பணியாற்றியபோது ஏழை, எளிய, தலித் மக்களின் தோழனாக அவர்கள் மேல் தனிப்பட்ட ஆர்வம் கொண்டிருந்தார் என்றும், தேசிய அளவில் இந்திய ஆயர் பேரவை யில் SC கமிஷன் உருவாக காரண மாக இருந்தார் என்றும், எதையும் தொலை நோக்குப் பார்வை யில் திட்டமிட்டு செயல்பட்டார் என்றும் கூறிய பேராயர் அவர்கள், இம்மணி



தொடர்ச்சி 2-ஆம் பக்கம்

சக்திவாய்ந்த உணர்ச்சியாகிய பயம் நம்மை ஆட்கொள்ள விட்டுவிட்டால், அது நம் இதயத்திலிருந்து இரக்கத்தை வெளியேற்றிவிடும்.-புனித தாமஸ் அக்குவினாஸ்

ஆசிரியர் பேனா...

# நன்றி கூறி விடைபெறுகிறேன்.



**இ**தழியல் பணி ஒரு ஈடு இணையற்ற பணி. இதயங்களை இணைக்கும் பணி. ஓரிடத்தில் இடம்பெறும் நிகழ்வுகளை, பலருக்கும், பல இடங்களுக்கும் செய்தியாக ஏந்திச் செல்வது இதழ்கள். பல வகைகளில், பல காரணங்களுக்காக ஒரு குறிப்பிட்ட குறிக்கோளுடன் இதழ்கள் வலம் வருகின்றன. 1907-ஆம் ஆண்டு மார்ச் முதல் நாள் நமது உயர் மறை மாவட்டத்தில் உதயமான ஆன்மீக வார இதழ், நூற்றுப்பதின்மூன்று ஆண்டளவாக இறைவனின் பெயரில் (சர்வவியாபி) தளர்வின்றி வாரம் தோறும் மலர்கிறது, இல்லம் தோறும் வலம் வருகிறது. மேமிகு கர்தினால் லூர்துசாமி ஆண்டகை அவர்கள் போன்ற மாமனிதர்கள், சான்றோர்கள் மற்றும் அருள்பெரும் தந்தையர்கள் இவ்விதழை வழிநடத்தி இருக்கின்றார்கள். சர்வவியாபி இதழில் பணிபுரிய எனக்களிக்கப்பட்ட வாய்ப்பினை பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

கடந்த ஏழு ஆண்டளவாக என்னையும் என்னோடு பணிபுரியும் அனைவரையும் வழிநடத்திய **இறைவனுக்கு** முதற்கண் நன்றி.

**பங்கு பணிகளில் இருந்த என்னை**, நமது பாசமிகு பேராயர் **மேதகு Dr.அந்தோணி ஆனந்தராயர்** அவர்கள் மிஷன் அச்சக மேலாளராகவும், சர்வவியாபி ஆசிரியராகவும், நியமித்தார். முற்றிலும் புதிய பணித்துறை. இதழியல் பற்றி ஓரளவு தெரிந்திருந்தாலும், ஒரு வார பத்திரிகையை நடத்துவது என்னால் இயலுமா என்று நான் தயங்கிய வேளையில், பேராயர் அவர்களின் துணிவு தரும் வார்த்தைகள் நான் இப்பணியை ஏற்கச் செய்தது. அவர் எங்களுக்கு அளித்த ஆர்வம், ஊக்கம் மற்றும் அனைத்து உதவிகளுக்கும், அவருக்கு மனமார்ந்த நன்றிகளை சமர்ப்பிக்கின்றேன்.

**இதழினை தட்டச்சு பதித்தல்,** அச்சிடல், அஞ்சலகத்தில் சேர்த்தல் - ஆகிய அனைத்து பணிகளையும் அயராது வாரம் தோறும் நிறைவேற்றுபவர்கள் என் உடன் உழைப்பாளர்களான **மிஷன் அச்சகப் பணியாளர்கள்.** இவர்கள் ஒவ்வொருவரும் தனித்துவம் மிக்கவர்கள்; அவரவர் பணியில் சிறந்தவர்கள். அவர்களது ஒத்துழைப்பும் உழைப்பும் இன்றியமையாதது. அவற்றை குறையற நல்கிய இவர்கள் ஒவ்வொருவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

சர்வவியாபி இதழுக்கு பல **எழுத்தாளர்கள்** வாரம் தோறும் தம் படைப்புகளை அனுப்பி எந்தவித பிரதிபலனும் எதிர்பாராமல் உதவினார்கள். இவர்களது பணியை மிகவும் மதிக்கின்றேன். இவர்களது உழைப்புக்கும் அர்ப்பணிப்புக்கும் நன்றி. ஆன்மீக கட்டுரைகள் வழங்கிய அருள்தந்தை ஆ. லூயிஸ், அருட்தந்தை அ. மெல்கிசதேக், அருட்சகோதரி லில்லி மேரி ME, ஞாயிறு சிந்தனைகள் நல்கிய அருட்தந்தை லூர்து ஜெயராஜ் மற்றும் அருள்தந்தையர், வாழ்வியல் கட்டுரைகள் வழங்கிய அருட்தந்தை ஜெயபாலன் மற்றும் திரு. போனி∴பாஸ் ஜூலியன், S. செல்வராஜ், விழுப்புரம், விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி வழங்கிய அருட்சகோதரர் அ.மெ. ஜேம்ஸ், இளம் உள்ளங்களைத் தொட்ட திரு. மேரி ராபர்ட் சாந்திதாஸ், விவிலிய சிந்தனைகள் வழங்கிய திரு. ஆரோக்கியதாஸ், திண்டிவனம், திரு. குழந்தைராஜ், காரைக்குடி, திரு. வெட்டிவயல் வளவன் இவர்களுடன் மொத்தம் இருபது எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளை வழங்கியிருக் கிறார்கள். அனைவருக்கும் நன்றி.

சர்வவியாபி இதழுக்கு சந்தாதாரர்களைச் சேர்த்து உதவிய அண்மையில் இறையடி சேர்ந்த அருள்தந்தை R. **செல்வராஜ்-** கோயமுத்தூர், அவர்களை நன்றியோடு நினைவுகூர்கிறோம். பல சந்தாதாரர்களைச் சேர்த்த திரு. **மரி அருள்ராஜ்**, ஆசிரியர், கடலூர் அவருக்கும் நன்றி. பிரான்ஸ் நாட்டில் சர்வவியாபி தொடர்பாளராக உதவிய திரு. **மூான் பென்மூமன்-** திருமதி. **சகாயமரி** குடும்பத்தாருக்கு நன்றி.

ஒரு இதழைத் தாங்கிப் பிடிப்பவர்கள் **சந்தாதாரர்களும் வாசகர்களும்**தான். உங்களது பேருதவியையும் ஊக்கத்தையும் நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

வரும் ஜூன் மாதம் முதல் நமது உயர் மறைமாவட்ட முதன்மை குரு **பேரருள்திரு. ஆ. அருளானந்தம்** அவர்கள் மிஷன் அச்சக மேலாளராகவும் சர்வவியாபி ஆசிரியராகவும் கூடுதல் பொறுப்பேற்கிறார். அவருக்கு அனைவரும் மிகுந்த ஒத்துழைப்புத் தாருங்கள். நூற்றாண்டு கடந்து பயணிக்கும் சர்வவியாபியின் வளர்ச்சிக்கு உதவிடுங்கள்.

மிஷன் அச்சகம் மற்றும், சர்வவியாபியில் என் பணியை என்னால் மறக்க இயலாது. இரண்டும் என் இரு கண்களாக கருதினேன். மூன்றாம் நிலை வாசகரை மனதில் கொண்டு என் எழுத்துகள் வலம்வரச் செய்தேன். ஏழு ஆண்டுகள், 350 இதழ்கள், 350 தலையங்க கட்டுரைகள் - நினைத்தாலே மலைப்பாக இருக்கிறது. ஆண்டவர் செயல் இது நம் கண்களுக்கு வியப்பே. இத்தகைய அரிய வாய்ப்பை எனக்கு அளித்த நமது பாசமிகு பேராயர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை தலைவணங்கி நன்றி கூறுகிறேன். நன்றியோடும் மனநிறைவோடும் விடை பெறுகிறேன். பங்கு பணிகளுக்கு திரும்பும் எனக்காகவும் என் பங்கிலுள்ள அனைத்து மக்களுக்காகவும் செபியுங்கள்.

**நன்றி! வணக்கம்!!** ●

முதல் பக்கத் தொடர்ச்சி...

மண்டபம் உருவாக உழைத்த அருட்தந்தை R. ஜோசப்ராஜ் மற்றும் அவரது குடும்பத்தாரை பாராட்டி, இம்மணி மண்டபம் பேராயரின் ஆன்மீகம் மற்றும் பணிகளை நாம் தியானிக்கவும், அவரைப்போல் செபம், ஆன்மீகம், ஏழையர்மேல் அன்பு கொண்டு வாழ நம்மை இயக்குகிறது என்றும் கூறி தம் உரையை நிறைவு செய்தார்.

செங்கல்பட்டு ஆயர் மேதகு **நீதிநாதன்** அவர்கள் பேராயர் மைக்கேல் அகுஸ்தீன் அவர்கள் "நல்லாயனுக்குரிய இதயம்" கொண்டு நல்ல ஆயராகவும், மனித நேயம் கொண்டு சமூகத்தில் அலைக் கழிக்கப்பட்ட மக்களின் பாதுகாவலராகவும், மக்களைத் தேடிச் சென்று அவர்களுக்காக பரிந்து பேசி போராடும் போராளியாகவும் செயல்பட்டதைக் குறிப்பிட்டு, தாம் அவருடன் நெருங்கி பழகும் வாய்ப்பு கிடைத்ததற்கு நன்றி கூறி தமது அழகிய உரையை நிறைவு செய்தார்.

சேலம் ஆயர் மேதகு **சிங்கராயர்** அவர்கள், பெங்களூரில் தாம் பயின்ற காலங்களில், பேராயர் மைக்கேல் அகுஸ்தீன் அவர்கள் தமக்கு பேராசிரியராகவும், நல்ல நண்பராகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்ததை நினைவு கூர்ந்து, தாம் சேலம் ஆயராக தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அவரது திருக் கரங்களால் ஆயர் பட்டம் பெற்றதை பெருமையுடன் எடுத்துரைத்தார். "நல்லாரைக் காண்பதும் நன்றே, நல்லாரை நினைவு கூர்வதும் நன்றே" என்று கூறி தமது உரையை நிறைவு செய்தார் ஆயர் அவர்கள்.

சென்னை-மயிலை முன்னாள் பேராயர் மேதகு A.M. **சின்னப்பா** அவர்கள் உரையாற்றும்போது, பேராயரின் துணிச்சலையும், தீர்க்கமாக முடிவெடுக்கும் திறனையும், ஏழை எளிய மக்கள் மீது அவரது அன்பு மற்றும் பணிகளையும்

தொடர்ச்சி 12-ஆம் பக்கம்..



**ந**மது நாட்டின் 17ஆவது பாராளுமன்ற தேர்தல் 11-4-2019 முதல் 19-5-2019 வரை ஏழு கட்டமாக நிகழ்த்தப் பட்டு, 23.5.2019 அன்று அத்தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டன. இத்தேர்தலில் இதுவரை இல்லாத அளவுக்கு 67 சதம் வாக்குகள் பதிவாகின. பாரதிய ஜனதா கட்சி தனித்து நின்று 303 இடங்களிலும், அதன் கூட்டணிக் கட்சிகளுடன் (National Democratic Alliance) இணைந்து மொத்தம் 353 இடங்களிலும் அமோக வெற்றி பெற்று வரும் மே - 30 ஆம் தேதி ஆட்சி அமைக்க இருக்கிறது. பாரதிய ஜனதா கட்சியின் பிரதம மந்திரி வேட்பாளர் (Prime Minsteral Candidate) திரு. நரேந்திர மோடி அவர்கள் மீண்டும் இரண்டாம் முறையாக இந்திய பிரதம மந்திரியாக பதவியேற்கிறார். அவர்களை உளப்பூர்வமாக வாழ்த்துகிறோம். அவரது பணி சிறக்க எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திக்கிறோம். - **ஆசிரியர்.**




தூய ஆவி பெருவிழா (9-06-2019)

திப.1:1-11; உரோ.8:8-17, யோவான் 14:15-16, 23-26

# புது பிறப்பளிக்கும் தூய ஆவியார்



*அருள்திரு.* L. **ஆரோக்கியதாஸ்**
உதவி பங்குதந்தை, பேராலயம்,



உயிர்த்த ஆண்டவரில் பிரியமான அன்பு சகோதர சகோதரிகளே! இன்று நாம் அனைவரும் 'பெந்தகோஸ்து' என்று அழைக்கப்படுகிற தூய ஆவியாரின் பெருவிழாவை மிக மிக மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறோம். 'பெந்தகோஸ்து' என்கிற இந்த வார்த்தையானது கிரேக்க மொழியிலிருந்து வருகிறது. இதன் பொருள் 'ஐம்பதாம் நாள்' என்பதாகும். இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவிற்கு அடுத்து வரும் ஐம்பதாவது நாளில் இந்த விழாவானது கொண்டாடப்படுவதால் இதற்கு இப்பெயர் கொடுக்கப் பட்டிருக்கிறது.

இஸ்ராயேல் மக்கள் ஐம்பதாம் நாள் விழா என்று ஒரு விழாவினைக் கொண்டாடுவதை தங்கள் வழக்கமாக கொண்டிருந்தனர். அதாவது 'நிலத்தின் முதற்கனிகள்' விழாவிலிருந்து ஏழு வாரங்களை கணக்கிட்டு அதன் பின் வரும் ஐம்பதாவது நாளில் இந்த விழாவினைக் கொண்டாடினர் (வி.ப 23,24, லேவி 16, எண் 28 மற்றும் இணை 16). எனவே இந்த விழாவானது, "வாரங்களின் விழா" என்று அழைக்கப்பட்டது. மேலும் இது "அறுவடையின் விழா"என்றும் அழைக்கப்பட்டது, ஏனெனில் இந்த நாளில் இஸ்ராயேல் மக்கள் தங்கள் நிலத்திலிருந்து அறுவடை செய்த தானியங்களை கடவுளுக்கு காணிக்கையாக செலுத்தினர். அன்று ஐம்பதாம் நாள் கொண்டாடப்பட்ட அந்த அறுவடையின் விழாவிற்கும், இன்று நாம் கொண்டாடுகின்ற இந்த ஐம்பதாம் நாள் விழாவான பெந்தகோஸ்து விழாவிற்கும் ஓர் ஒற்றுமை இருக்கிறது. அன்று அந்த ஐம்பதாம் நாள் விழாவிலே, வயல்களில் இருந்து தானியங்கள் அறுவடை செய்யப்பட்டு கடவுளுக்கென காணிக்கையாக செலுத்தப் பட்டன. தூய ஆவியார் பெருவிழாவான இந்த ஐம்பதாம் நாள் விழாவிலே, உலகின் பல திசைகளிலிருந்து ஆன்மாக்கள் உயிர்த்த ஆண்டவருக்காக அறுவடை செய்யப்படுகின்றன. இன்றைய முதல் வாசகத்திலே நாம் வாசிக்கக் கேட்டோம். பார்த்தியர், மேதியர், எலாமியர் மற்றும் மெசபதோமியா, யூதேயா, கப்பதோக்கியா, போந்து, ஆசியா, பிரிகியா, பம்பிலியா, எகிப்து, சிரேன், லிபியா, உரோமை, கிரேக்கர் மற்றும் அரேபியர் என்று உலகின் பல இடங்களில் இருந்து வந்திருந்த மக்கள் அனைவரும் அவரவர் தாய் மொழிகளில் திருத்தூதர்களின் வார்த்தைகளைக் கேட்டு புரிந்துகொண்டு இயேசுவை தங்கள் மீட்பராக ஏற்றுக் கொண்டனர். எனவே அந்த ஐம்பதாம் நாளிலே, ஏராளாமான ஆன்மாக்கள் அன்று ஆண்டவருக்காக அறுவடை செய்யப்பட்டன.

பிரியமானவர்களே! மேலும், இன்று நாம் தாய்த்திருச்சபையின் பிறந்த நாள் விழாவையும் கொண்டாடுகின்றோம். தூய ஆவியார் எங்கெங்கெல்லாம் இருக்கின்றாரோ அங்கெல்லாம் ஒரு புதுப்பிறப்பு நடைபெறுகிறது.

முதலாவது, தொ.நூ.1:1-2ல் காண்கிறோம், "தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தபொழுது, மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த் திரளின்மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது". உலகம் உருவாவதற்கு முன்பு கடவுளின் ஆவி தண்ணீரின்மீது அசைவாடிக்கொண்டிருக்கிறார். அப்போது விண்ணுலகும், மண்ணுலகும் மற்றும் ஏனைய படைப்புகள் அனைத்தும் பிறக்கின்றன. இரண்டாவது, எசேக்கியேல் 37 – ல் இஸ்ராயேல் மக்கள் உலர்ந்த எலும்புகளைப் போன்று உயிரற்ற நிலையில் இருக்கிறார்கள். அப்போது ஆண்டவர் எசேக்கியேலைப் பார்த்து அந்த உலர்ந்த எலும்புகளுக்கு இறைவாக்கு உரைக்கச் சொல்கிறார். அவர் அவ்வாறு இறைவாக்கு உரைத்த உடன் அந்த உலர்ந்த எலும்புகளுக்குள் ஆண்டவர் தன் ஆவியைப் பொழிந்தார் (வ.14), அவர்களும் உயிர்பெற்று எழுந்து நின்றார்கள். எனவே உயிரில்லாத உலர்ந்த எலும்புகளாய் இருந்த இஸ்ராயேல் மக்களின் வாழ்வு புதுப்பிறப்பு அடைந்தது ஆவியின் வல்லமையால், ஆவியின் அசைவாடுதலால்தான். மூன்றாவது, லூக்கா நற்செய்தி அதிகாரம் 1 நமக்கு கூறுகிறது, அன்னை மரியாள் மீது ஆவியானவர் அசைவாடுகிற போது அங்கே மூவொரு கடவுளின் இரண்டாம் ஆளாகிய மகன் மனிதனாக பிறப்பெடுக்கிறார். "தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும்" (லூக் 1:35).

அந்த வகையில், இன்றைய முதல் வாசகத்தில் சீடர்கள் அச்சமுற்றவர்களாய் ஒரே இடத்தில் கூடியிருக்கிறார்கள். ஏன் ஒரே இடத்தில் கூடியிருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் தேற்றிக்கொள்வதற்காகவோ! அல்லது யூத தலைமை சங்கத்தாரிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவோ இருக்கலாம். ஆனால் அவர்கள் அனைவரும் உயிரற்று இறந்தவர்களைப்போன்றே இருந்தார்கள். நெருப்புப்போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் இறங்கி வந்தவுடன், அவர்கள் அனைவரும் புதுப்பிறப்படைந்து துணிச்சல் பெருகிறார்கள். ஆவியின் வல்லமையால் அவர்கள் அனைவரும் வெவ்வேறு மொழிகளில் இயேசுவின் உயிர்ப்பின் செய்தியை அறிவிக்கிறார்கள். அதுவரை மூலைகளில் முடங்கிக் கிடந்தவர்கள், முழு வீச்சில் நற்செய்தியை அறிவிக்கிறார்கள். எனவே அன்று தான் திருச்சபையானது பிறந்தது என்பதை நாம் அறிகின்றோம்.

ஆம்! இறையேசுவில் பிரியமானவர்களே! ஆவியானவர் எங்கெங்கெல்லாம் அசைவாடுகிறாரோ அங்கெல்லாம் வல்லமை பொழியப்படுகிறது, அச்சம் களையப்படுகிறது, அங்கெல்லாம் புதுப்பிறப்பு நடைபெறுகிறது. ஆவியானவர் நம்மில் இறங்குகிறபோது உயிரற்றவர்களாய் இருக்கிற நாம் உயிர் பெறுகிறோம், உரம் பெறுகிறோம். அன்று ஆவியின் அசைவாடுதலால் தாய்திருச்சபை பிறந்தது போல, இன்றைய நமது அகில உலக திருச்சபையும், நமது மறைமாவட்ட திருச்சபையும் நமது பங்குகளும், குட்டித் திருச்சபை எனப்படும் நமது குடும்பங்களும் புதுப்பிறப் படைந்திட ஆவியின் வல்லமையை வேண்டுவோம். தூய ஆவியால் ஆற்றல்பெற்று, புதுப்பிறப்படைவோம். – ஆமென்.

**ஒரு நண்பனை நீண்ட தேடலினால் கஷ்டப்பட்டு கண்டு பிடிக்கப்பட்டு பத்திரப்படுத்தி கொள்ளத்தக்கது. -புனித ஜெரோம்.**



## இயேசுவின் கேள்விக்கென்ன பதில்? (27)

ME Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

**144. “ஒரு மணிநேரம் கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா? (மத் 26:40)**

அன்புக்கும், பகைமைக்கும், கவலைக்கும் தூக்கம் வராது. அன்பு செய்யும் ஒருவரோடு துயர நேரத்தில் விழித்திருக்க வலிமை வேண்டும். நோயுற்று இறக்கும் தருவாயில் இருக்கும் குழந்தை அருகில், ஒரு தாயால் மட்டும்தான் உண்ணாமல் உறங்காமல் விழித்திருக்க முடியும். “வலுவில்லையா?” என்று இயேசு கேட்கிறார். உடல் வலிமையை அல்ல. அன்பின் வலிமையைக் கேள்வி கேட்கிறார்.

அன்புக்குத்தான் அபார வலிமை உண்டு. அந்த வலிமை தன் சீடருக்கு இல்லாததை இயேசு காண்கிறார். “ஒரு மணிநேரம் **கூட**” இதில் இயேசுவின் மனவேதனை வெளிப் படுகிறது. அன்புக்கு மட்டுமல்ல பகைமைக்கும் விழித்திருக்க வலிமை உண்டு. சீடர்கள் தூங்கிக்கொண்டிருக்கும்போது இயேசுவின் பகைவர்கள் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். யூதாஸ் கூட விழித்துக் கொண்டிருக்கிறார்.

**145. “என்ன உறங்கிக்கொண்டா இருக்கிறீர்கள்? (லூக். 22:46)**

ஒரு மணி நேரம் கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா? என்று கேட்டுவிட்டு மீண்டும் செபிக்கச் சென்ற இயேசு விழித்துக்கொண்டிருப்பார்கள் என்று திரும்பிவந்து பார்க்கிறார். ஆனால் அவர்களோ இன்னும் தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து அதிசயித்து இந்தக் கேள்வியைக் கேட்கிறார். இந்தக் கேள்வியை நம்மைப் பார்த்துக் கேட்டால் என்ன பதில் சொல்வோம்?

**146. இன்னும் உறங்கி ஓய்வெடுக்கிறீர்களா? (மத் 26:45)**

இது சற்று வருத்தமான கேள்வி. சீடர்களின் அன்பு படிப்படியாகக்குறைவதைக் காண்கிறார். ஓய்வெடுக்கிறார்கள்... “பாருங்கள், நேரம் நெருங்கி வந்துவிட்டது. மானிட மகன் பாவிகளின் கையில் ஒப்புவிக்கப்படுகிறார்.” “என் நேரம், என் நேரம்” என்று பலமுறை கூறி எதிர்பார்த்திருந்த நேரம் நெருங்கி விட்டது. இயேசுவின் இதயத்தின் ஒவ்வொரு துடிப்பும் உடலின் ஒவ்வொரு அணுவும் இந்த நேரத்தை அச்ச நடுக்கத்தோடு எதிர்நோக்கிக்கொண்டிருந்தது எனலாம். அதைச் சீடர்கள் எவரும் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. இது வேதனை மேல் வேதனையைச் சேர்க்கிறது. இயேசு மனிதன் என்ற முறையில் இந்தத் துயரங்களை எல்லாம் அனுபவித்தார்.

**147. “தோழா, எதற்காக வந்தாய்?” என்று கேட்டார். (மத் 26:50)**

இயேசு மனுவுரு எடுத்து இறையன்பை எல்லா மனிதருக்கும் வேறுபாடின்றி வெளிப்படுத்திய பின் **எந்த மனிதரிலும் பகைவனைக் காண முடியாது** என்பதை **“தோழா”** என்னும் வார்த்தை சுட்டிக்காட்டுகிறது. இன்று தன் மதத்தை, தன் சாதியை ஏன் தன் மொழியைச் சேராதவரையும் பகை வராகக் காணும் மனிதர்களுக்கு இயேசு போதிக்கும் இறுதி பாடம்: **மனிதராகப் பிறந்த அனைவரும் நம் “தோழரே!”** “எதற்காக வந்தாய்?” இயேசுவுக்குத் தெரியும். ஆனாலும் அவரே அதைச் சொல்ல வைக்கிறார். யூதாஸ் பதில் சொல்ல வில்லை. ஆனால் காவலர்கள் இயேசுவை அணுகி, அவரைப் பற்றிப் பிடித்துக் கைதுசெய்தனர். இயேசுவைப் பற்றிக்கொண்டு வாழ வேண்டிய சீடர், பகைவர்கள் அவரைப் பற்றிப் பிடித்துக்கைது செய்யக் காட்டிக் கொடுத்துவிட்டு நிற்கிறார்.

**148. தமக்கு நிகழப்போகும் அனைத்தையும் இயேசு அறிந்து அவர்கள் முன் சென்று “யாரைத் தேடுகிறீர்கள்? என்று கேட்டார். (யோவான் 18:4)**

தமக்கு நிகழப்போகும் அனைத்தையும் இயேசு அறிந்து... இந்தக் கேள்வியைக் கேட்கிறார். அவர்களுடைய பதிலுக்கு இயேசுவின் பதில் மிக வலிமை வாய்ந்தது. அவர்கள் முன் சென்று, பகைவர்கள் முன் சென்று, பகைவர்களைக் கண்டு மட்டுமல்ல வரவிருக்கும் வேதனையைக் கண்டும் ஓடி ஒளியாத மாவீரனாக இயேசு காணப்படுகிறார். அவர்கள் மறுமொழியாக, நாசரத்து இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். நான்தான் என்று இயேசு சொன்னதும் அவர்கள் பின்வாங்கித் தரையில் விழுந்தார்கள். படைபலத்தைவிட துணிவுக்கு மிகுந்த ஆற்றல் உண்டு.

**149. யாரைத் தேடுகிறீர்கள்? என்று இயேசு மீண்டும் அவர்களிடம் கேட்டார். (யோவான் 18:7)**

யாரைத் தேடுகிறீர்கள்? என்று இயேசு மீண்டும் அவர்களிடம் கேட்டார். மீண்டும் அதே பதிலை அவர்கள் கொடுத்தார்கள். இவ்வளவு வெளிப்படையாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் ஒருவரைக் காட்டிக்கொடுக்கக் கையூட்டு வாங்கிவந்து நமக்குக் காட்டப்பட்ட இவர் அவராக இருக்க முடியுமோ? என்ற ஒரு சந்தேகம் காவலர்களுக்கு வந்திருக்குமோ?

இயேசுவைப் பலர் தேடினர். ஆனால் அவரிடம் உதவி பெற, அவரைத் தொட, அவரைப் பார்க்கத் தேடினார்கள். இங்குதான் அவரைக் கைதுசெய்யத் தேடுகிறார்கள்.

நான்தான் என்று உங்களிடம் சொன்னேனே. நீங்கள் என்னைத் தேடுகிறீர்கள் என்றால் இவர்களைப் போகவிடுங்கள் என்று அந்த நேரத்திலும் தம் சீடர் மீது அக்கறையைக் காட்டுகிறார்.

**150. “நான் என் தந்தையின் துணையை வேண்ட முடியாதென்றா நினைத்தாய்? நான் வேண்டினால் அவர் பன்னிரு பெரும்படைப்பிரிவுகளுக்கு மேற்பட்ட வானதூதரை எனக்கு அனுப்பி வைப்பாரே. அப்படியானால் இவ்வாறு நிகழ வேண்டும் என்ற மறைநூல் வாக்குகள் எவ்வாறு நிறைவேறும்? என்றார். (மத் 26:53-54)**

நாம் பல நேரங்களில் செபத்தை ஒரு மந்திரக்கோல் போலக் கருதுகிறோம். கடவுளிடம் கேட்டுவிட்டால் அது கிடைத்துவிடும். கேட்டது கிடைக்கவில்லை என்றால் “கடவுள் இல்லை” என்ற முடிவுக்கு வந்துவிடுகிறோம். இங்கு இயேசு தெளிவாகத் தன்னுடைய இறை நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார்: “நான் வேண்டினால் அவர் பன்னிரு பெரும்படைப்பிரிவுகளுக்கு மேற்பட்ட வானதூதரை எனக்கு அனுப்பி வைப்பாரே. அப்படியானால் இவ்வாறு நிகழ வேண்டும் என்ற மறைநூல் வாக்குகள் எவ்வாறு நிறைவேறும்?” என்றார். இறைச்சித்தம் தம் விருப்பத்துக்கு மாறாக இருந்தாலும் அதை நிறைவேற்றுவதில் தன் கீழ்ப்படிதலைக் காட்டுகிறார்.

**151. தந்தை எனக்களித்தத் துன்பக் கிண்ணத்தில் இருந்து நான் குடிக்காமல் இருப்பேனோ?” என்றார். (யோவான் 18:11)**

இந்தக் கேள்வியை இயேசு பேதுருவிடம் கேட்கிறார். சீமோன் பேதுருவிடம் ஒரு வாள் இருந்தது. அவர் அதை உருவித் தலைமைக் குருவின் பணியாளரைத் தாக்கி அவரது வலக் காதை வெட்டினார். அப்போதுதான் இந்தக் கேள்வியைக் கேட்டார்.

எல்லா நிகழ்வுகளையுமே, அது இன்பமாக இருந்தாலும் துன்பமாக இருந்தாலும் அதைத் தன் தந்தை தனக்கு அளித்ததாகவே ஏற்று வாழ்ந்தவர் இயேசு என்பது தெரிகிறது. அவருடைய கடமை உணர்வின் உறுதியைக் காட்டுகிறது இந்தக் கேள்வி.

**152. “கள்வனைப் பிடிக்க வருவதுபோல் வாள்களோடும் தடிகளோடும் என்னைக் கைதுசெய்ய வந்தது ஏன்?” (மத் 26:55)**

காவலர்களிடம் கேட்கப்பட்ட கேள்வி இது. இயேசுவை அவருடைய போதனையில் குற்றம் சாட்டினார்கள். அப்படியானால் அவர் வெளிப்படையாக போதிக்கும்போது கைதுசெய்ய வேண்டும். ஆனால் திருடிவிட்டுப் பதுங்கியிருக்கும் ஒரு கள்வனைப் பிடிப்பது போலப் பிடிக்க வந்தது சரியில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். இன்றும் நியாயத்தைத் தட்டிக் கேட்கும் ஒருவரைக் கைதுசெய்யச் சட்டத்தில் இடம் இல்லை என்றால் பயங்கரவாதியைச் சுட்டு வீழ்த்துவதுபோல மறைந்திருந்து சுட்டுக் கொல்கிறார்கள்.

இயேசு இவர்கள் அனைவர் பெயராலும்தான் இந்தக் கேள்வியைக் கேட்டார்.

தொடரும்



## உம்மோடும் (ஆவியோடும்) இருப்பாராக?!

– சுவாமி ஆ. லூயிஸ்.

இன்றைய வழிபாட்டில், “ஆண்டவர் உங்களோடு இருப்பாராக” என்பதற்கு “உமது ஆன்மாவோடும் இருப்பாராக” என்று பதில் கூறுகிறோம். இதை எவ்வாறு புரிந்து கொள்வது, இதை இன்னமும் இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப எவ்வாறு பதில் கூறுவது என்று குழுவாக சிந்தித்து விசுவாசத்தில் வளம் பெறுவோம். சிந்தனை வழி இறையியல் வளம் பெறுகிறது. நம்பிக்கை சிந்தனையையும் இதயத்தையும் இணைத்து அருள்பெற உதவுகின்றது. மேலை நாடுகளில் சிந்தனை முதலிடம் பெறுகிறது. கீழை நாடுகளில் இதய உணர்வு முதலிடம் பெறுகிறது. மூலத்தைப் பொதுத் திருச்சபை வழங்குகிறது. அதை பொருத்தமாகத் தலத் திருச்சபை செயல் படுத்துகிறது. இந்நிலையில் பழைய, புதிய கண்ணோட்டம் இரண்டும் இடம் பெறுகின்றபோது சிக்கல் ஏற்படுகின்றது. பழையது பழையதில், புதியது புதியதில் என்பது அருள்வாக்கு நெறியாகும்.

**ஆன்மா-உடல்:** உடல் பாவமானது, ஆன்மா புனிதமானது என்ற கருத்தோட்டம் அன்றும் இன்றும் இருந்து வருகிறது. உடலைப் புனிதமாக்கத்தான் இயேசு மனுவுருவாகி, இதை வாங்கிப் புசியுங்கள் என்று தனது புனிதமான உடலைத் தந்தார். இவ்வாறு முழு மனிதத்தையும் புனிதமாக்கி, உலகில் மீட்பின் அருள் அடையாளமாய் திருச்சபை விளங்க வேண்டுமென விரும்புகின்றார். இருப்பினும் பிளவுபட்ட மனிதம் இன்னமும் போராட்டத்தில்தான் இணைந்து வாழ முயல் கின்றது, வெற்றித் தோல்வி இவைகளைச் சந்தித்து வருகிறது. படைப்பிற்கும் படைக்கின்றவருக்கும் இடையறாப் போராட்டம் தொடர்ந்து வெற்றி பெற இறை அருளை உணர்வோம், பெறுவோம், பகிர்வோம், பயணிப்போம். உயிர்த்த ஆண்டவர் நமது வெற்றிக்கு வித்தாக விளங்குகின்றார்.

**முழுமை-புனிதம்:** எங்கு முழுமை இருக்கின்றதோ அங்கு ஆரோக்கியம் இருக்கின்றது. முழுமை புனிதத்தின் அடையாள மாகும். எனவேதான் எதிலும், எப்போதும், எங்கும் முழுமையை நாம் தழுவுவது முக்கியமாகிறது. முழு உள்ளத்தோடும் முழு மனதோடும் முழு ஆன்மாவோடும் அன்பு செய், பின் எதையும் செய் என்று வழிநடத்தப்படுகின்றோம். விளிம்பில் வாழ்கின் றவர்கள் மேலோட்டமாக இருப்பவர்கள், விளையாட்டாக வாழ்வை எண்ணுகின்றவர்கள் மனநிறைவோடு வாழ இயலாது. வாழ்வின் மையத்தில் நிலை நிற்பவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் போராடி தொடர்ந்து வாழ்ந்து வருவார்கள், ஏனையோர் மனம் உடைந்து சிதைந்துப் போக வாய்ப்புண்டு.

“உடல்-உள்ளம்-உயிர்” இத்தகைய மூன்று நிலை களையும் உயிரால் பிணைத்து உடலையும் உள்ளத்தையும் அரவணைத்து வாழ கற்றுக்கொள்வதே வாழ்வின் கலையாகும். உயிர் இறைவனிடமிருந்து வருகிறது. ஏனையது படைப்பில் இருந்து வருகிறது. இவைகளை இணைத்து வாழ்வது கடினம் என்றாலும், கடவுளின் கருணை கணக்கில் லாமல் காலமெல்லாம், எல்லாருக்கும் அருளப்படுவதால் அஞ்சவேண்டாம். வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தி மனிதத்தை சிதைக்க வேண்டாம். ஆதாயத்திற்கு அரசியலிலும் சமயத்திலும் சிதைவைப் பெரிதுபடுத்தி விழிப்போடு வென்று வாழ்வோம்.

**சமத்துவம்:** “கடவுள் முன் சமம்” என்ற நெறிமுறையும் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருகிறது. பெண் அடிமை, சாதிக் கொடுமை, இனப்பிரிவு, மொழிப்பிரிவு, பரம்பரை உணர்வு போன்ற பிளவுபடுத்தும் கூறுகளைக் கூட கடவுள்முன் எண்பிக்க முயல்வது எவ்வளவு அதர்மம் என்பதை இன்றைய காலக்கட்டத்தில் உணராத மக்கள் இருப்பதை ஏற்றுக்கொள்ள இடமில்லை. “சட்டத்தின் முன் சமம்” என்பதும் எவ்வளவு வேறுபட்ட விளக்கங்களுக்கு ஆளாகி வருகிறது என்பதையும் நாம் அறிந்து வருகிறோம். இவைகட்கெல்லாம் விடியலை வழங்கவே இயேசு வந்தார், செயல்படுகிறார் என்று திருச்சபைக்குள்ளும் வெளியிலும் நாம் வெளிச்சம் போட்டு காட்டுவது, போராடுவது காலத்தின் கட்டாயமாகும். விழிப்புணர்வே விடுதலைக்கு வழியாகும்.

**சகோதரத்துவம்:** விதிவிலக்கின்றி ஒவ்வொருக் குழந்தை யும் கடவுளின் சாயலில் படைக்கப்படுவதால் எல்லாரும் சகோதர சகோதரிகள் என்ற பொதுமைத் தன்மை மிகவும் சமூக சமய வாழ்வுக்குத் தேவையானது என்பதை உணர்வோம். ஆணும் பெண்ணும் ஒரே கடவுளின் குழந்தைகள் என்பதால் சகோதரத்துவ, சகோதரி என்ற விழிப்புணர்வு நம்மில் வளர்வது, வளர்த்தெடுக்கப்படுவது முக்கியமாகும். வெளி அடையாளங்களை முன்னுரிமைப் படுத்தி, உள் உணர்வுகளை இன்னமும் அறியாமை என்ற போர்வையில் விளையாடுவது நியாயமல்ல. இவண்தான் திருச்சபை இன்றும் சகோதரத்துவத்தைப் பேணி வருகிறது. பலவீனங்களைப் பெரிதுபடுத்தாது, நேர்மறையான முயற்சியை ஆதரிப்பது நல்லது. இருப்பினும் சிலர் வாழ்வு மனப்பான்மையோடும் எதார்த்த உணர்வோடும் குறைகளைப் பேசி கலகம் விளைவிப்பது மேலானது அல்ல என்பதை உணர்வது நன்று. உறவுக்குக் கரம், உரிமைக்குக் குரல் என வாழ்வோம்.

**சுதந்திரம்:** கடவுள் ஒவ்வொரு குழந்தையும் தன்னைப் போலவே சுதந்திரமாக வாழத்தான் அழைக்கின்றார். சுதந்திரம் ஒவ்வொருவரின் பிறப்புரிமையாகும். இந்நிலையை சமூகக் குழுக்கள் மதிக்க வேண்டும், வளர்க்க வேண்டும், விடுதலை உணர்வை அனுபவமாக்க அன்றாடம் வழி நடத்த வேண்டும். யாரும் யாருக்கும் அடிமை இல்லை என்ற மனித நேயத்தை இல்லாதவர்கள், இயலாதவர்கள் நடுவே வளர்ப்பதே முக்கியமான பணியாகும். “இன்றியமையாத வற்றில் ஒற்றுமை, முடிவு பெறாதவற்றில் சுதந்திரம், அனைத்திலும் அன்பு” என்பதே வாழ்வின் நேர்த்தியான நெறியாகும். இதில்தான் கிறிஸ்தவக் குழுக்கள் முன்னுரிமைக் கொடுத்து, விழிப்புணர்வை வழங்கி, கடினமானாலும், மக்களை எங்கும் கட்டி எழுப்ப வேண்டும். நமது வீட்டையும் நாம் முறையாக வைத்திருந்தால்தான் மற்றவர்களை நல்வழிபடுத்த முயலும். தான்கடைபிடிக்காததை மற்றவர்கள் மீது சுமத்துவது நன்றன்று. திருச்சபை முக்கியமான காரியங்களில் முழு கவனத்தையும் செலுத்தட்டும். சிறு சிறு காரியங்களைத் தலத் திருச்சபையின் பொறுப்பான சுதந்திரத்திற்கு விட்டுவிடுவது மேலானது. பிரிப்பதைவிட இணைப்பதே மேலானது. ஆண்டவர் உம்மோடும் இருப்பாராக! கடவுள் இணைப்பதை நாம் பிரிக்க வேண்டாம். வளமாக வாழ வழிபாடு உதவுவதாக. ●

**வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :** சர்வவியாபி இதழில் மரித்தோர் நினைவு செபம் பதிவு செய்ய விரும்புவோர் குறைந்தது **மூன்று வாரங்களுக்கு முன்** பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

**2019-2020** சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். MO/DD/ CHEQUE/ வங்கி மூலம் செலுத்தலாம். **சந்தா எண்ணை** தவறாமல் குறிப்பிடவும். - ஆசிரியர்.

**வங்கி கணக்கு விவரம்**

BANK NAME : IOB-PONDICHERRY MAIN
JAWHARLAL NEHRU STREET, Pondy-1.
A/C Name : MISSION PRESS
A/C. No. : 007002000000123 IFSC :IOBA0000070
தொடர்புக்கு: 0413/2334360; 9600571252



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். ***ச.சாமிமுத்து,*** திருச்சி.



## 22-ஆம் படலம்

வாதை 9– மீண்டும் ஆண்டவர் மோசேயிடம், எகிப்து நாட்டின்மேல் இருள் ஏற்படவும் இருளில் அவர்கள் தடுமாறவும் உன் கையை வானோக்கி நீட்டு என்றார். மோசே வானத்தை நோக்கித் தம் கையை நீட்டினார். மூன்று நாள்களாக எகிப்து நாட்டைக் காரிருள் கவ்வியிருந்தது. (விப.10:21–22).

காப்பியப் பாடல் 1208

**20 எகிப்தின் மாமன்னன் கதிகலங்கிப் போனான்! இசுரேலர் கடவுளின் ஆணையை ஏற்று, அடிமைகளாகிய இசுரேலரை நாட்டைவிட்டு வெளியில் செல்ல அனுமதித் தால் அவர்கள் திரும்பி வருவார்களா என்னும் ஐயம்பார்வோனைப் பற்றிப் பதற வைத்தது!**

இருள்சூழ் வேளையில் எகிப்தின் இயக்கமே
மருண்டோய்ந் தடங்கி ஒடுங்கிப் போனது!
அப்பொழு தந்தோ அரசன் பார்வோன்
கப்பிய துயரால் கலங்கிய உளத்தனாய்
எண்ணிப் பார்த்தான் எகிப்து நாட்டின்
மண்விட் டடிமைகள் போவதன் விளைவெலாம்;
அடிமை களான இசுரயேல் மக்கள்
முடிவாய் நாட்டிற் கப்பால் சென்றே
அவர்கள் கடவுளை வழிபடப் போனால்,
தவறு நேரலாம் மீண்டிவண் திரும்பி
வருவார் என்பதற்(கு) உறுதியும் இலையே;
விரும்பி எகிப்திற் கவர்இனம் வந்து
அடிமை வேலை செயவிலை என்றால்,
முடிய வேண்டிய கட்டட வேலைகள்
முடங்கியே போகும், அடிமைகள் இல்லா
இடமென எகிப்து இருக்க நேரிடும்
என்றே பார்வோன் இருளினில் மூழ்கி
ஒன்றும் புரிந்திடா திருந்தே மயங்கினான்.

## 23-ஆம் படலம்

மேலும் ஆண்டவர் மோசேயை நோக்கி, பார்வோன் மேலும் எகிப்தின் மேலும் இன்னும் ஒரு கொள்ளை நோய் வரச் செய்வேன். அவன் உங்களை முற்றிலும் போக விடுவதோடு இங்கிருந்து உங்களைத் துரத்தி விரட்டி விடுவான் (விப.11:1).

காப்பியப் பாடல் 1209

**1 இருள் கௌவி இருந்த எகிப்தில் யாவே கடவுளின் திருவுளத் திட்டப்படி வந்த பத்தாம் வாதை தலைப் பேறுகள் அனைத்தையும் கொன்றது. தன்பலத்தை நம்பி இருந்த பார்வோன் செயலற்றுத் தத்தளித்தான். மனித விடுதலையின் வைகறை புலர்ந்தது!**

மனக்கவலை கொண்டவனாய் மன்னன் பார்வோன்
மருட்டுகிற காரிருளில் மூழ்கி நொந்தான்;
தனக்குவமை இல்லாத இறைவன் சொல்லைத்
தாண்டியவன் தன்நினைப்பின் முனைப்பில் நின்றான்!
கனவுபல காண்பவனாய்த் தனையே நம்பி,
கடந்துகரை சேர்ந்திடலாம் என்றே எண்ணி
வனவிலங்கு மனப்பான்மை கொண்டே பார்வோன்
வறண்டநில மரமெனவே வாடிப் போனான்!

காப்பியப் பாடல் 1210

**2 ஒன்பது வாதைகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்தனவே அவற்றையெல்லாம் பார்வோன் தன் ஆணவத்தால் முறியடிக்கவே முனைந்து நின்றானேயொழிய, அவையெல்லாம் யாவே கடவுள், பார்வோனின் மனமாற்றத்திற்கு வழங்கப்பெற்ற இறையருளின் கொடைகள் என்னும் பேருண்மையை உணரக்கூடிய பணிவுள்ளம் இல்லாதவனாய் இருந்து கெட்டான்!**

இடவலந்தாம் எவையென்றே காணற் கில்லா
இருள்வதையின் பிடியழுத்த வடித்தான் கண்ணீர்!
கடவுளருள் புரியாதான் போக்கி னாலே
கருணைநிறை இறையாவே தந்த வாதை,
கடந்தடுத்து ஒவ்வொன்றாய் வந்த தெல்லாம்
கடந்தோய்ந்தே போகுமெனும் கணிப்பி னாலே,
முடம்படுமோர் கெடுநிலைதான் வந்தே சூழ
முணகியிருள் மூழ்கிவிழி பிதுங்கி நொந்தான்!

- தொடரும்..

# "அழைக்கப் பெற்றோர்" யார்?

*– தந்தை ஜெயபாலன், பாளையங்கோட்டை.*

**தி**ருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும், கிறிஸ்தவராக வாழ அழைக்கப் பெற்றோர்! அவர்களில் சிறப்பு நிலையாக இறை பணிபுரிய அழைக்கப் பெற்றோர்தான் குருக்களும் இருபால் துறவியரும் ஆவர்! இவர்களும் இறைமக்கள் அனைவருமே இயேசுக் கிறிஸ்து தன்னையே உணவாக வழங்கும் திருவிருந்துக்கு நிரந்தர அழைப்புப் பெற்றவர்கள். சில இடங்களில் அருள்பணியாளர்களுடைய தனிப்பட்ட அழைப்பும் கூட திருப்பலியின் ஆரம்பத்தில் வழங்கப் படுகிறது. இத்துடன் ஒவ்வொரு திருப்பலியிலும் குரு "செம்மறியின் விருந்துக்கு **அழைக்கப் பெற்றோர் பேறுபெற்றோர்**" என்று, 'இதை வாங்கி உண்ணுங்கள்' எனக் கூறிய இயேசுவின் பெயரால், திருப்பலி யில் பங்குபெற வந்திருப்பவர்களை திருவிருந்தில் பங்குபெற அழைக்கின்றார். பீடம் நோக்கி "அவ்விருந்தை உண்டிட **சென்றிடு வோம்** இன்பம் பொங்க" என்ற காலம் மாறிப்போய் '**வந்திடுவோம்** பெற்றுக் கொள்ளுங்கள்' என்று கோவிலுக்கு உள்ளே வர மனமில்லாமல் கால் ஊனமுற்றவர் போல் வெளியே நிற்பவர்களுக்கும் கட்டாயமாய் திருவிருந்தைப் பரிமாறுகிற காலம் இந்தக் காலம்.

அரசின் விலையில்லாப் பொருள்களைப் பெறுகிற அனுப வத்தில் அனுதினமும் கிடைக்கும் இலவசப் பொருளாகத் திவ்விய நற்கருணையை 'சும்மா' பெற்றுக் கொள்கிற வாடிக்கையாளர்கள் அழைக்கப் பெற்றவர்களா?! "ஒவ்வொரு வரும் தம்மையே சோதித்த பின்பே இவ்விருந்தில் பங்குபெற வேண்டும். ஏனெனில் ஆண்டவர் இயேசுவின் உடல் என உணராமல் (நற்கருணை) உண்பவர் தம்மீது தண்டனைத் தீர்ப்பையே வருவித்துக் கொள்கின்றார். (1கொரி.11:28, 29) என்று புனித பவுல் கூறியிருக்கிறாரே? இந்த விருந்தைப் பெற நாக்கையோ, கையையோ அவ்வளவு எளிதாக நீட்டலாமா? யூதாசு கூட அப்பத்துண்டைப் பெற்றுக் கொண்டவுடன் வெளியே போனான். 'அது இரவு நேரம் (யோவான்.13:30) என்று புனித யோவான் குறிப்பிடுகிறார். தகுதியற்ற நிலையில் அவன் பெற்றுக் கொண்ட இயேசுவின் உடல் (அப்பத்துண்டு) அவனுக்குத் தண்டனைத் தீர்ப்பாக அமைந்தது. எனவே அடுத்த நாளே, "புறப்பட்டுப் போய் தூக்குப் போட்டுக் கொண்டான்" (மத்.27:6) என்று புனித மத்தேயு கூறுகிறார். இவன் **அழைப்புப் பெற்றவன்; ஆனால் அழைப்பை ஏற்காதவன்;** எனவே தகுதியற்றவன். நம் மத்தியில் நடைபெறும் திருமண விருந்துக்குப் போகக்கூட நமக்குத் தகுதி வேண்டும் அல்லவா? அதாவது திருமண வீட்டார் அழைப்பு இருக்க வேண்டும்; அவர்களது நல் உறவு இருக்க வேண்டும்; செய்முறைகள் செய்திருக்க வேண்டும்; முறையான உடையும் உடுத்தியிருக்க வேண்டும் அல்லவா? இயேசு கூறிய திருமண விருந்து உவமையிலும் அழைக்கப்பட்டவர் வராத நிலையில் அனுமதிக்கப்பட்டவராக விருந்துக்கு வந்தவரில் ஒருவன் "திருமண உடையின்றி இருந்ததால் புறம்பே தள்ளப்படுகிறான் (காண்.மத்.22:12,13). நம் எல்லாருக்கும் (பிறமதத்தவருக்கும்கூட) அனுமதி எப்பவும் உண்டும், ஆனால் அழைக்கப் பெற்றிருக்கிறோமா என்று நம்மையே ஒவ்வொரு முறையும் சோதித்துக் கொள்வது மிக நல்லது! மிக அவசியம்!!

ஒவ்வொரு நாளும் கோவிலுக்கு (கோவில் வளாகத்துக்கு) வருவதோ, பக்த சபை, அன்பியம் இக்கூட்டங்களில் கலந்து கொள் வதோ, அல்லது சிலுவைப் பாதை, ஜெபமாலை தினமும் செபிப்பதோ இவைமட்டும் நம்மை திருவிருந்துக்கு அழைப்புப் பெற்றவராக்கி விடாது. கோவிலுக்கு யாரும் எப்பவும் வரலாம் - ஆனால் திருப்பலிக்கு நினைத்த நேரத்தில் வரமுடியாது! வரவும் கூடாது! பயணச்சீட்டு முன்பதிவு செய்யப்பட்ட பேருந்துக்கோ,தொடர்வண்டிக்கோ குறிப் பிட்ட நேரம் உள்ளது போல, திருப்பலிக்கு வரக் குறிப்பிட்ட நேரம் ஒவ்வொரு கோவிலிலும் உண்டு. அந்த நேரம் தவறுவது ஆர்வ மின்மை, விழிப்பில்லாத நிலை! மணமகன் வரும் நேரத்தில் விழிப் பாயில்லாத மணமகளின் தோழியர் உள்ளே அனுமதிக்கப்பட வில்லை (காண்.மத்.25:10) என்பது போல திருவிருந்தைப் பெறத் தகுதிபெற நேரம் தவறாமல் விழிப்பாயிருக்க வேண்டும். இதன் அடிப் படையில்தான் அருள்பணியாளர்களும் கூட கூட்டுத் திருப்பலியில் துவக்கத்தில் சேர்ந்து கொள்ளத் தவறுகிறபொழுது வேறு எந்த நேரத் திலும் கலந்துகொள்வதைத் தவிர்க்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மூவொரு கடவுளின் பெயரால் ஆரம்பமாகும் திருப்பலியின் துவக்கத்திலிருந்தே, அதே மூவொரு கடவுளின் பெயரால் குரு இறுதி

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்...

## நாம் வளமையாயிருப்பது வறுமையில் உள்ளோர்க்கு உதவ.

'சிந்தனைச் செல்வர்' பேராசிரியர் அ. குழந்தைராஜ், காரைக்குடி.

**நா**ன் சம்பாதித்தேன், என் பணம். என் முன்னோர்கள் எனக்கு விட்டுவைத்த சொத்து. அதை நான் ஏன் பிறருக்கு கொடுக்க வேண்டும் என பலர் நினைக்கிறார்கள். கடவுள் உனக்குத் தந்த அருளை நீ மட்டும் வைத்துக்கொள்ள அல்ல. விவசாயி தான் உழைத்து அறுவடை செய்ததை பிறருக்குக் கொடுக்காமல் (இலவசமாக அல்ல, காசுக்காக) இருந்தால் நாடு என்னவாகும்?. திறமை மிக்க மருத்துவர், நான் ஏன் வைத்தியம் செய்ய வேண்டும், விஞ்ஞானி தன் கண்டு பிடிப்புக்களை பிறரோடு ஏன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மை இருந்தால் உலகம் உருப்படாது. “பெறுவதைக் காட்டிலேயும் தருவதே இன்பம்” என்ற ஆண்டவர் இயேசு குறிப்பிடத்தக்கது.

ரோமர் 3:4, மாற்கு 10:17-22 குடிகாரன், திருடன், விபச்சாரன் தன் குற்றங்களை சில சமயங்களில் ஒப்புக்கொள்வான். ஆனால் பணத்தாசை பிடித்தவன் அப்படி ஒப்புக்கொள்ள மாட்டான். தானும் உண்ண உடுத்தமாட்டான்; பிறரையும் உண்ண, உடுத்த விட மாட்டான். “நலல போதகரே, நான் நிலைவாழ்வு பெற என்ன செய்யவேண்டும்” என்பதற்கு இயேசு கூறிய பதில் ‘உன் உடமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடு’ அவன் நிலைவாழ்வை அடைய விரும்புகிறான். ஆனால் பணத்தை சொத்தை விட மனமில்லை. நாமும் அவ்வாறே. திருப்பலி உடுப்பு 4000 ரூபாய்க்கு வாங்கிக் கொடுப்பவன், 400 ரூபாய்க்கு ஒரு வேட்டி சட்டை சேலையை ஏழைக்கு கொடுக்க மாட்டான்.

நறுமணத் தைலம் பூசிய பெண்ணைப் பார்த்து இதை விற்று ஏழைகளுக்கு கொடுத்திருக்கலாமே என்ற யூதாஸின் எண்ணம் ஏழைகள்பால் அன்று, அந்தப் பணத்தை கொஞ்சம் திருடிக்கொள்ளலாம் என்ற எண்ணம்தான். 22 காரட் தங்க நகை கிறிஸ்தவனும் செய்வதில்லை 18 காரட் இருப்பதே ஆச்சரியம். எந்த ‘மட்டன்’ கடைக்காரன் 1 கிலோ மட்டன் தருகிறான். வெளியே போய் நிறுத்துப் பார்த்தால் 950 கிராம். 1 லிட்டர் பெட்ரோல் 950 ஆக குறைவதேன்?

அனனியா சபிரா கதை நமக்குத் தெரியும். விற்ற பணத்தை முழுவதுமாக அப்போஸ்தலர்களிடம் கொடுக்காமல் பாதிப் பணத்தை அளித்து வைத்துவிட்டு கணவனும் மனைவியும் ஒருசேரப் பொய் சொன்னதன் பலன். அன்றே மரித்தார்கள். “ஊக்குவிக்கும் பண்புடைய பர்னபா தன் சொத்துக்களை விற்று முழுவதும் கொடுத்தார். அவர் ஒரு லேவி. லேவியர்கள் பெறுவார்களே தவிர கொடுப்பவர்கள் அல்ல (தி.ப.4:36-37).

(மாற்கு12) ஏழைக் கைம்பெண் மகிழ்ச்சியோடு உண்டியலில் காணிக்கை போட்டாள் முகம் மலர்ந்தது. இப்போது கையை மூடிக்கொண்டு தலைகுனிந்து காணிக்கை போடுகிறார்கள். வேலை கிடைக்காத ஒரு போதகர் போலீஸ் வேலைக்குப் போனார். இன்டர்வியூவில் ஒரு கலவரத்தை நீங்கள் எப்படி கலைப்பீர்கள், சமாளிப்பீர்கள் என்று உயர் அதிகாரி கேட்டார். போதகர் சொன்னார் “ஒரு உண்டியல் பெட்டி எடுத்து வசூலுக்கு ஆரம்பிப்பேன்' கூட்டம் கலைந்து விடும் என்றார்.

கோவிலுக்கு வரும் ஆட்களைப் பார்த்தால் ‘ஜிலு ஜிலு’ வென்று உடையணிந்திருப்பார்கள். “ஏழைகள் எங்கே, ஒருவரையும் காணோமே” என்று நினைப்போம். உண்டியல் தட்டைப் பார்த்தால், பணக்காரர்கள் இங்கு யாருமே இல்லையா? என நினைக்கத் தோன்றும்.

ஒரு பண்ணையார் வீட்டில் ஒரு பூசணிக்காய் காய்த் திருந்தது. மகன் சொன்னான் “அப்பா நம்ம தோட்டத்திலே ஒரு பூசணிக்காய் காய்த்திருக்கிறது” என்றான். அப்பா சொன்னார் “ அம்மாவிடம் கொடுத்து சமைக்கச் சொல்” என்றார். பையன் சொன்னான் அதை பறிச்சு அம்மாகிட்டே கொடுத்தேன். “இது அழுகிப் போச்சு, சமைக்க முடியாது என்றான். அப்ப மாட்டுக்குப் போடு என்றார். அப்பா 'மாடுதிங்க மாட்டேங்குது' என்றான். அப்படீன்னா 'உங்க வாத்தியாருக்கிட்டே கொடு' என்றாராம்.

அதுபோலத்தான் கந்துவட்டி, லஞ்சம் வாங்குபவன் வந்த பணத்தில் கொஞ்சம் கடவுளுக்கும் கொடுப்போம் என்ற தர்மம், தர்மமாகாது. தனக்கென்று வைத்திருப்பதில் ஒரு பகுதியைக் கொடுப்பதுதான் தர்மம்.

நாம் என்ன கொடுத்தோமோ, அது நம்முடையது.

நாம் என்ன செலவழித்தோமோ, அது நம்மிடம் இருந்தது.

நாம் எதை விட்டுச்செல்கிறோமோ, அது நமக்கு இழப்பு.

மத்தேயு நற்செய்தியில் தர்மம் கொடுப்பதைப் பற்றி 33 தடவையும் மாற்கு நற்செய்தியில் 20 தடவையும், லூக்காவில் 53 தடவையும் யோவானில் 17 முறையும் கூறப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அறுவடை சமயத்தில் வரப்பு ஓரமாக உள்ள தானியங் களை ஏழைகள் அந்நியர்களுக்கு விட்டு வைக்க வேண்டும். ரூத் புத்தகத்தில் போவாஸ் நகோமி வாழ்க்கையில் இதைப் பார்க்கலாம்.

மண்ணகத்தில் செல்வம் சேகரிக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அழித்துவிடும். விண்ணகத்தில் செல்வம் சேகரியுங்கள். இயேசுவின் பல உவமானங்களில் செல்வம் பற்றியவை அதிகம். மண்ணில் புதைத்துவைத்த ஒரு தெனாரியம் நிகழ்வில் இயேசு அவனிடம் கணக்கு கேட்கிறார். அதைப் பன்மடங்கு ஆக்கியிருக்கலாமே. ஏன் வீணாக புதைத்து வைத்தாய்? என வினவுகிறார் இயேசு. அதுபோல நமக்கு கடவுள் கொடுத்த தாலந்துகளுக்கு நாம் கணக்கு கொடுக்க வேண்டும். பெரும் பணமும் சேர்த்தவரெல்லாம் இறுதியில், பங்குச்சந்தை, ரியல் எஸ்டேட், கந்துவட்டி களியாட்டம், குடி போன்றவைகளில் பணத்தை இழக்கிறார் கள். ஊரில் அபார்ட்மெண்ட் கட்ட வேண்டாம். விண்ணகத் தில் ஒரு குடிசை கட்ட ஒரு செங்கலுக்குரிய தொகையை மண்ணக ஏழைகளுக்கு கொடு. விண்ணக வீடு 'ரெடி' யானவுடன் நாம் நிரந்தரமாக இயேசுவோடு இருக்கலாம்.

‘கொடுங்கள் கொடுக்கப்படும்’ அமுக்கி குலுக்கி போடுங்கள் நான் வானகத்தின் பலகணிகளைத் திறந்து உங்களால் பெற்றுக்கொள்ள முடியாத அளவில் கொட்டுகிறேன். என்னை சோதித்துப் பாருங்கள் என்கிறார்.

கேளுங்கள் கொடுக்கப்படும் - இது கடவுள்.

கொடுங்கள் கொடுக்கப்படும் - இது ஆசீர்.

ஏற்பது இகழ்ச்சி -கொடுப்பது மகிழ்ச்சி. ●


## மணமகள் தேவை

தனியார் கம்பெனியில் மேலாளராக (**H.R.** ஆக) பணிபுரியும் **M.B.A.** படித்த கத்தோலிக்க கிறிஸ்துவ (**R.C.**) மணமகனுக்கு அரசாங்க வேலை, காலேஜ், பள்ளி ஆசிரியை, மற்றும் பேங்க், வெளிநாட்டில் வசிக்கும் வேலையில் உள்ள (பிரெஞ்சு நேஷனாலிட்டி) கத்தோலிக்க கிறிஸ்துவ (**R.C.**) நல்ல குணமுள்ள மணமகள் தேவை.

**தொடர்புக்கு:** 9489469724 / 0413-2353515

128 இளம் உள்ளங்களுக்கு

## பாவப் பரிகாரம்



– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

“மெய்யான கழிவிரக்கம் (repentance) சீர்திருத்தத்தை உள்ளடக்கியது” என்று பிரபல அமெரிக்க தத்துவ அறிஞர். ஹோசேயா பாலூ (Hosea Ballou) கூறுகிறார். ஒரு தவறுக்காக கழிவிரக்கம் கொள்வது நல்லது. ஆனால் அதற்கு பிராயச்சித்த மாக இரக்கத்தின் செயலாக பயனுள்ள காரியம் செய்வது அதனினும் நன்றே.

**கேப்டன் செஷ்ஷயர்** (Captain Cheshire): இவர் இங்கிலாந்தின் விமானப் படையில் (Royal Air Force) மிகச் சிறப்பாக பணியாற்றியவர், குறிப்பாக இரண்டாவது உலகப் போரின் போது இவர் காட்டிய துணிச்சலுக்காக விக்டோரியா கிராஸ் பதக்கம் பெற்றவர். பிற்காலத்தில் அவரது மனித நேய சேவையின் மூலம் பெரும் கொடையாளராக போற்றப்பட்டார்.

**குறி தவறாத குண்டு மழை:** இரண்டாவது உலகப் போரின்போது எதிரிகளின் இலக்குகளின் மீது குறி தவறாமல் குண்டு மழை பொழிந்தார் கேப்டன் செஷ்ஷயர். ஒரு நொடி தாம் தாக்கிய பகுதியை மேலிருந்து நோக்கினார்.

**நாசம், சர்வ நாசம்:** எதிரி பிரதேசமெங்கும் அவர் போட்ட குண்டுகளின் விளைவாக எங்கும் சாவும், சர்வநாசமும்தான் காணப்பட்டது. அந்த காட்சி மிகப் பயங்கரமாகவும் கோரமானதாக வும் காணப்பட்டது. மனிதாபிமானமற்ற செயலாகத் தோன்றியது. மனிதத்திற்கு எதிரான மன்னிக்க முடியாத, கடவுளுக்கே அடுக் காத செயலாகத் தோன்றியது! இந்த காட்சி அவர் இதயத்தை பிழிந்தது. அவர் கண்கள் ஈரமாகின. இப்போது மனிதத்திற்கு எதிராக தான் செய்த காரியத்தை நினைத்து பார்க்க இயலாத வராக இருந்தார். இது ஒன்றும் முதன்முதலாக அவர் ஈடுபட்ட வான்தாக்குதல் அல்ல. மேலும், இரண்டாம் உலகப் போரின் போது புதிய விமானிகளுக்கு பயிற்சியாளராகவும் பணியாற்றியவர்.

**ஞானோதயம்:** இந்த திறமைகள் எல்லாமே மனித சமுதாயத் தின் அழிவிற்குதானா? அன்று குண்டு மழை பொழிந்தபின் அந்த அகோர காட்சிகள் அவர் கண்முன் மீண்டும், மீண்டும் வந்து அவரை பெரும் துயருக்குள்ளாக்கியது. அவர் முடிவெடுத்தார். நேராக தன் மேலதிகாரிகளிடம் சென்று தன் ராஜினாமாவை கொடுத் தார். இதற்கு பிறகும் அவரால் அந்த வேலையை செய்ய இயலாது!

**பிராயச்சித்தம்:** அவர் மனமாற்றம் அத்தோடு நிற்கவில்லை. பிராயச்சித்தம் செய்யவும் செய்தார். தன் சொத்து முழுவதையும், விற்று போரினால் அநாதைகளான பிள்ளைகளுக்காகவும், போரில் ஊனமடைந்தவர்களுக்காகவும் 1948 இல் பராமரிப்பு மையம் ஆரம்பித்தார். இந்த இரக்க செயல் பலராலும் பாராட்டப்பட்டு வரவேற்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக செஷ்ஷயர் இல்லங்கள் (Cheshire Homes) உலகமெங்கும் ஆரம்பிக்கப்பட்டன. இறைவன் விரும்பும் இரக்கச் சிந்தை நிறைந்த பாவப் பரிகாரம் இதுவே. ●

6-ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஆசிர் வழங்கி சென்று வாருங்கள் என்ற விடை தரும் வரை முழுநேரமும் கோவிலுக்குள் நன்மனதோடு இருப்பவரே செம்மறியின் திருவிருந்துக்கு அழைக்கப் பெற்றவர்! வழிபாடு தொடக்கத்தில் கூடிவந்தவர்கள் அனைவரின் முன்பாகவும் ஒருவருக்கொருவர் பாவ அறிக்கையிட்டு செபித்தபின் குரு வழங்கும் பாவமன்னிப்பைப் பெற்றவரே அழைப்புப் பெற்றவர்! தனியே ஒருவர் தனக்கென மன்னிப்பு வேண்டுவது என்பது கோவிலில் கூடியிருக்கும் மற்றவரை மதிக்காத நிலை; அன்பில்லாத நிலை; எனவே அழைப்புப் பெறாத நிலை! ஞாயிற்றுக்கிழமைகளில் பாவ மன்னிப்பின் அடையாளமாகத் தீர்த்தம் தெளிக்கும் போது நாம் இல்லை என்றாலும் திருவிருந்துக்கு அழைப்புப் பெறாதவர்களே! திருப்பாடல் 15இல் உள்ளபடி ஆண்டவரின் கூடாரத்தில் தங்கிடத் தகுதியுள்ளவர் அனை வருமே உண்மையில் ஆண்டவரின் திருவிருந்துக்கு அழைக்கப்பெற்றோர். அந்த ஒரு தகுதியை பெறும் வகையில் நாம் ஒவ்வொருவரும் வாழ வரம் அருள்வதே செம்மறியின் திருவிருந்துதான்! எனவே நாம் திருப்பலிக்கு வருவதே பிறருடைய நல்வார்த்தைக்காகவோ அல்லது நமது மனதிருப்திக் காகவோ அல்லதுமாறாக அன்றாட வாழ்வின் செயல்களில் ஆண்டவரது அன்பின் சாட்சிகளாய் வாழ்ந்திட அருள் பெறவே! அப்போது தான் நாம் அழைக்கப்பெற்றவர்கள்! கிறிஸ்தவர்கள் எனும் பெயருக்குரியவர்கள். ●

## உனக்கு சொந்தமானதை கொடு



– G. *போனிஃபாஸ் ஜூலியன்*, புதுவை–9.

மன்னன் ஒருவன் காட்டிற்கு வேட்டையாட சென்றான். மன்னருக்கு உரிய பல தகுதிகளில் வேட்டையாடுவதும் ஒன்று. பல மணி நேரம் வேட்டையாடி விட்டு தன் படை வீரர்களோடு ஊருக்கு திரும்பி கொண்டிருந்தான் தன் குதிரைகள் அனைத்தும் சோர்வுற்று இருப்பதை மன்னன் அறிந்தான். அவைகளுக்கு மேய்ச்சல் நிலத்தில் புல் கொடுக்க வேண்டும் என்று எண்ணி வழி நெடுகிலும் பார்த்துக் கொண்டு வந்தான். சிறிது தூரத்தில் ஒரு பசுமையான நிலம் அவன் கண்ணுக்கு பட்டது. அவனும் படை வீரர்களும் அதன் அருகே சென்றார்கள். அந்த நிலத்தின் அருகில் ஒரு வயதான பெரியவர் நின்று கொண்டிருந்தார். மன்னன் அவரைப் பார்த்து, தன்னை அறிமுகம் செய்து கொண்டான். தன் குதிரைகள் அந்த நிலத்தில் புல் மேய்ந்துகொள்ள விடும்படி தன்னுடன் இருந்தவர்களுக்கு உத்தரவிட்டான். இதைக் கண்ட அந்தப் பெரியவர் இந்த நிலம் வேண்டாம். நான் இன்னும் சிறப்பான நிலத்தை உம் குதிரைகளுக்கு காட்டுவேன் என்று கூறி மன்னனை அழைத்து சென்றார். மன்னன் எவ்வளவு தூரம் என்று கேட்க, சிறிது தூரம் தான் என்று சொன்னார். அனைவரும் அந்தப் பெரியவர் காட்டிய இடத்தை நோக்கி நடந்து சென்றார்கள். இடம் வந்த பாடில்லை, போய்க் கொண்டே நான் மன்னன் என்று தெரிந்தும் என்னை அலக்கழிக்கிறாய். பெரியவர் மன்னித்து விடுங்கள். இன்னும் சிறிது தூரத்தில் அந்த இடத்தை அடைந்து விடலாம் என்று கூறினார். அவ்வாறே அந்த இடம் வந்தது குதிரைகள் அவிழ்த்துவிடப்பட்டன. குதிரைகள் நன்றாக மேய்ந்து வந்தன. அரசன் பரிவாரங்களோடு புறப்படும்போது பெரியவரிடம் ஒரு கேள்வி கேட்டான். ஏன் அந்த இடத்தை கொடுக்காமல் இவ்வளவு தூரம் வந்து இந்த இடத்தை காட்டினீர்? அதற்கு பெரியவர் கூடிய பதில் சற்று சிந்திக்க வைத்தது. பெரியவர் கூறினார், முதலில் நீங்கள் தேர்ந்தெடுத்த இடம் அது என்னுடையது அன்று, மற்றவருடைய இடத்தில் உங்களு டைய குதிரைகளை மேய்க்க சொல்வது என்ன நியாயம், இப்போது நீங்கள் இருக்கிறீர்களே, இது என்னுடைய சொந்த மான நிலம், யாருக்கும் எப்போதும் தரலாம் அதற்காகத்தான் உங்களை இவ்வளவு தூரம் அழைத்து வத்தேன். சிரமம் கொடுத்ததற்கு மன்னிக்க வேண்டும் என்றார். அரசன் என்று தெரிந்தும் நீதியை நிலைநாட்டிய அந்தப் பெரியவரை அரசன் நன்றி கூறி விடைப்பெற்று சென்றான். மேலும் அந்தப் பெரிய வரை அரண்மனைக்கு வரவழைத்து தகுந்த சன்மானமும் கொடுத்தான். பெரியவருடைய செயலால் மன்னனுக்கு ஒரு அறிவுரை கிடைத்தது.

சாதாரணமாக சொல்வார்கள் கடை தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்கலாமா. நமக்கு சொந்த மில்லாத ஒரு பொருளை பிறருக்கு கொடுப்பது தவறு. நம்மிடம் இல்லை என்றால் இல்லை என்று சொல்லிவிட வேண்டும். பிறர் பொருளை எடுத்து மற்றவருக்கு கொடுக்கும்போது அது ஒரு திருட்டு செயலுக்கு சமம். பிச்சை என்று நம்மிடம் வருபவருக்கு நம்மால் ஆன உதவி செய்ய வேண்டும். இருந்தால் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் மரியாதையாக சொல்லிவிட வேண்டும். அதற்காக எதிர் வீட்டையோ, பக்கத்து வீட்டையோ காட்டி அங்கே போ என்று சொல்லக்கூடாது. என்னைப் பொறுத்தவரையில் புதுச்சேரி மாநிலத்தில் ஒரு சிறந்த பண்பாடு உண்டு. பிச்சை எடுப்பவர்கள் வந்தால் இருந்தால் கொடுப்பார்கள். இல்லையென்றால் “பொறுத்தன்னு போ” அதாவது பொறுத்துக் கொண்டு போங்கள். கோபித்துக் கொள்ள வேண்டாம் என்று அர்த்தம். இவ்விதமான சிறப்புப் பண்புகளை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். ●

## தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி-190
### ஜூன் மாத வெளியீடு. (2019)



அருட்சகோதரர் **அ.மே. ஜேம்ஸ், தாராபுரம்.**

**வா**ரம் தவறாமல் 113 ஆண்டுகளாக மலர்ந்து வரும் சர்வவியாபி இதழின் நறுமணத்தை முழு மையாக முகர்ந்து அனுபவித்துவரும் வாசகர்களுக்கு ஜெபம் நிறைந்த வாழ்த்துக்கள். ஜூன் மாதம் என்றாலே இயேசுவின் திரு இருதயத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம் என்று நாம் அறிந்தது. இதயம் பொதுவாக அன்பின் அடையாளமாக நாம் பயன்படுத்துகிறோம். ஆனால் இயேசுவின் இதயம் எல்லா இதயத்திற்கும் ஊற்றானது. தியாகம் நிறைந்தது. இரக்கம் நிறைந்தது. ஆகவேதான் தன் இறுதித் துளி இரத்தமும் நீரையும் கூட மனித குலத்திற்காக சிந்திய இதயம். பொதுவாக மானிடர் இதயம் செயல்படாது போனால் நாம் இறந்தவர் களாக கருதப்படுகிறோம். ஆனால் இயேசுவின் இதயம் இறவா இதயம். ஆகவேதான் வெள்ளிக் கிழமையை யேசுவின் இதயத்திற்கு சிறப்பாக அர்ப்பணித்து குடும்பங்களையும், உலகையும், நம்மையும் அர்ப்பணித்து ஜெபிக்கிறோம். இயேசுவின் திரு இருதயம் பலருக்கு காட்சிதந்து அர்ப்பணித்து ஜெபிக்கக் கேட்டதை நாம் அறிவோம். இந்த நவீன காலத்தில் இறை இரக்க பக்தி வளர்ச்சி அடைந்து வருவதை அறிந்துள்ளோம். எனவே நமது வாழ்க்கைப் பயணம் இயேசுவின் இதயத்தைப் போல் வாழ இறைவனின் துணையை நாடுவோம் இறைவன் நம் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

இறை ஊழியன் அருட்சகோதரர். **அ.மே.ஜேம்ஸ்**

**குறிப்பு:** 1) பதில்களை **10–7–2019** க்குள் அனுப்பி வைக்கவும். ❖ குறியிட்ட முகவரிக்கு அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன். 6) அல்லது e-mail:soosaimariarajendran@gmail.com என்ற முகவரிக்கும் அனுப்பலாம்.

### இடமிருந்து வலம்:

1. ............ஒருவனை உனக்கு அரசனாக நியமிக்காதே.
2. நமக்காக அந்த நாட்டை...........பார்ப்பார்கள்.
4. கன்மலைத் ..............அவன் சுவைத்தான்.
5. உங்கள் காலடிகள் வீங்கவும்........................
10. ஏனெனில் அவன்............ அஞ்சவில்லை.
17. அவருக்குத் தன்னார்வக் காணிக்கை களைச்.........

### வலமிருந்து இடம்:

1. இஸ்ரயேல் மக்கள்..............துக்கம் கொண்டாடின நாட்கள் நிறைவுற்றன.
3. குருக்களுக்குச் சேரவேண்டிய..............ஆவது.
6. நீ இறக்கும்..............நெருங்கி விட்டது.
7. அவரே உண்மையான .............எனவும்.
13. வானத்தின் மழை நீரையே..............நாடு.
15. அதை...................அழித்து விடுங்கள்.
16. அவன்.............கதவோடு சேர்த்துக் குத்துவாய்.
20. ........................கைவிட்டு விடாதே.

### மேலிருந்து கீழ்:

1. ..................புளிப்புள்ள அப்பத்தை உண்ணாதே.
2. அவனது ஆற்றலை ............. நிரப்பும்.
3. ..............இதயங்களில் காத்துக் கொள்ளுங்கள்.
7. ..............உன்னிடமிருந்து தீமையை அகற்று.
11. இவர்கள்.................கழுத்துள்ள மக்கள்.
14. இரத்தத்தை..............அருந்த வேண்டாம்.
19. நகர் வாயிலுக்குக் கொண்டுபோய்க் ........... எறிவர்.

### கீழிருந்து மேல்:

5. அவனுக்கு .....................காட்டாதே.
8. அங்கே உங்கள் கண்களால்..............
9. அனாதைக்கு உரிய நீதியைப்...................
12. அவர் ...................வஞ்சனை செய்வதில்லை.
13. ஆண்டவர் எங்கள்................கேட்டார்.
18. நாங்கள் ....................உயிரோடு இருப்பதுபோல்
21. அதுவும் அரக்கர்களின்................ எனக் கருதப்பட்டது.

### இணைச் சட்டம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | 1 | | | | |
| | 14 | | 19 | ▨ | | | | | 3 |
| | | | | | | | | 6 | |
| | | | | | | 21 | 4 | | |
| ▨ | | 18 | | | | 11 | | 7 | |
| | | | | 13 | ▨ | | | | |
| 10 | | | | | | | | | |
| | | | 20 | | | 16 | | | |
| | | | | | 15 | | | | |
| 5 | | | 17 | | | | 9 | 12 | 8 |



**பதில் அனுப்ப வேண்டிய முகவரி:**
❖ அருட்சகோதரர். **அ.மே.ஜேம்ஸ், தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி-190**
தூய மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம்,
தாராபுரம் – **638 656**, திருப்பூர் –Dt.
செல்: **95979 75430**

## தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி-181
### செப்டம்பர் மாத சிறப்புப் போட்டியின் முடிவுகள்

7–4–2019 இதழின் தொடர்ச்சி....

**சரியான விடை எழுதியவர்கள் 40 பேர்:**

1) Sr. ஜேம்ஸ் மேரி – இடையார்பாளையம், **2)** M. ஜெஸிகலா – மூலைக்காடு, **3)** A. பூரணநாதன்– பொம்மிடி, **4)** P. ரெஜினா மேரி அம்புரோஸ் – வரதராஜன்பேட்டை, **5)** D. அன்னபுஷ்பம்– T.கள்ளிக்குளம், **6)** A. அன்னமேரி–ஜமீன்கூடலூர், **7)** பொற்கொடி தேவராயன்–செம்மண்டலம், **8)** A. மோட்சமேரி–திருப்பூர், **9)** S. சகாய அன்பு ராஜா– T.கள்ளிக்குளம், **10)** கிறிஸ்டி ரெஜினா–பெரம்பூர், **11)** Sr.மெல்கியோர்–R.S.புரம், **12)** G. செசீலி–தேனி, **13)** செல்லப்பாங்கி மேரி Rtd.Tr–சோமனூர், **14)** A. சுகந்தா பீட்டர்–வேலாயுதம்பாளையம், **15)** A. மரிய ரீனா– தென்கரைக்கோட்டை, **16)** Dr.S.சாமுவேல் ஜெயக்குமார்–கோவைப்புதூர், **17)** S. ஜெயமேரி Rtd.Tr–தாராபுரம், **18)** F. அமல ரோஸ்லீன்–நானாக்குடி, **19)** V.ஆதி–அணிலாடி, **20)** Y.புஷ்பா வெனிட்டா – அழகப்பபுரம், **21.** ரெஜினாராபின் – வெலிங்டன், **22.** மாதரஸி ஜோசப்–உப்பளம், **23)** A. சார்லஸ் விஜய் – திண்டிவனம். **24.** J.நோயல் அருள்தாஸ்– திருவாக்கவுண்டனூர், **25.** Sr. சிறிய புஷ்பம்–கடலூர், **26)** பிலோமினா சத்தியநாதன்–தேனி, **27)** M.அனுசுயா–செஞ்சி, **28)** Sr. ஜூலி எலிசபெத்– மாதாக்கோட்டை **29)** Dr.A.வில்லியம் ராபர்ட்ஸன் – கோட்டுச்சேரி, **30)** K.டேனியல் விஜய்–ஆசீர்புரம். **31)** A. மரியப்பன் Rtd.Tr–விரியூர், **32.** S.மேரி ரோசாலி– கணபதி, **33)** K.L. இஸபெல்லா லூர்துராஜன்– C.நம்மியந்தல், **34.** A.அந்தோணியம்மாள் Rtd.Tr– கூவத்தூர். **35)** A.லில்லி ஜாக்குலின்– கீழ்ப்பெரும்பாக்கம், **36)** மேரி லயோலா திவ்யநாதன்– கடலூர், **37)** R. ஜெயமணி–மங்கலம்பேட்டை, **38)** Z.அமிர்தம்பேபி–மறவன்குடியிருப்பு, **39)** A. மேரி ப்ளோரா – விரியூர், **40)** K.டேனியேல் விஜய்– ஆசீர்புரம்.

**ஓர் ஆண்டுக்கு 35 பேருக்கு சர்வவியாபி இதழ் இலவசமாக அனுப்பப்படும்.**

1) Sr.பவுலீன் சின்னம்மாள்–சிலுக்குவார்பட்டி, **2)** A. சூசைமேரி–திண்டிவனம், **3)** I.ஸ்தனிஸ்லாஸ் – கோண்டூர், **4)** R. ஜெனித்ராஜ்குமார்–சிவகாசி, **5)** A. அருள் மலர் – செம்பியம், **6)** டிவைன் தாரீஸ் – அக்கரைக் கொடிவேரி, **7)** S. பாபு – இருதயபுரம், **8)** S. லலிதா– மூலைக்காடு, **9)** Sr. நேசா – மல்லிகாபுரம், **10)** K. ஜெப ரெக்ஸி – சிந்தாமணி, **11)** Y. அற்புதசீலி Tr–நிலக்கோட்டை, **12)** ராஜா சகாயமேரி– சௌந்தர்யாபாண்டியபுரம், **13.** A. சத்தியராஜ் Tr – இளையாங்கண்ணி, **14)** X. ஜோசப் ஞானசெல்வன்– சுண்டாமுத்தூர், **15)** S. ஷீபா–செம்பருத்திவிளை, **16)** M. சிரில் சலோனா–கரடிசித்தூர், **17)** Sr. ஞானதீபம்– புலியகுளம், **18)** D.சுகிர்தா ஜெசிமேரி–மறவன் குடியிருப்பு, **19)** T. பிரான்சிஸ் ஆர்லன்– காரணம்பேட்டை, **20)** J. சீலி ஜெரோம் – அழகப்பபுரம், **21)** அனு அன்றோ–இராயப்பபுரம், **22)** J. சார்லஸ் பிரபா–விசுவாசபுரம், **23.** Sr. மேரி புஷ்பம்–சேயூர் சீவடி, **24)** A. ஷகிலா பன்னீர்தாஸ்–சௌந்திரபாண்டியபுரம், **25)** J.சார்லஸ் பிரபா–T.கள்ளிக்குளம், **26)** A. பனிமலர் சுகந்தா–T.கள்ளிக்குளம், **27)** A. பாத்திமா நிர்மலாமேரி – மேல்பெருவிளை, **28)** A. ஆரோக்கிய செல்வராணி – மறவன் குடியிருப்பு, **29)** J. அன்பு செல்வம் – T.கள்ளிக்குளம், **30)** J. ஆல்பின்மேரி– T.கள்ளிக்குளம், **31)** P.மிக்கேல் சந்தியா– கீழசிந்தாமணி, **32)** A.சில்வியா அனித்தா– பாளையங்கோட்டை, **33)** M. ஆண்டோ விஜயராணி– திருத்தங்கல், **34)** Sr.M.சுஜயா – கிழக்கு தாம்பரம், **35)** M.எட்விஜ் மணி–தெற்குகள்ளிக்குளம்.

தொடரும்...

**ஓடும் நீருக்கு அருகில் உள்ள மரம் பசுமையாகவும் இருக்கும் பழங்களையும் மிகுதியாக தரும். - புனித அவிலா தெரசா.**

## விண்ணக வாழ்வின் 11-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



திரு. S. ஜான் பிரிட்டோ M.A.,M.Ed.,

தோற்றம் 01-10-1949 மறைவு 04-06-2008

"ஆண்டவருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கிய வான்கள்! ஏனெனில் அவர்கள் தங்கள் கடமை முடிந்து இளைப்பாறுகிறார்கள்"
-திருவெளி.14:13

பெற்றோருக்கு அன்பு மகனாய்
மாணவர் வணங்கும் ஆசானாய்
மற்றவர்க்கெல்லாம் ஒளிவிளக்காய்
தரணியில் எங்கள் உறுதுணையாய்
அல்லும் பகலும் உழைத்தவரே
வாழ்வில் கலங்கரை விளக்காக
எமக்காய் வாழ்ந்த உத்தமரே
கண்ணீர் அஞ்சலி ஏற்றிடுவீர்
கடவுள் பாதம் அமர்ந்திடுவீர்.

**இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 2-6-2019 ஞாயிற்றுக்கிழமை, காலை 6.00 மணிக்கு திருப்பாபுலியூர், புனித சூசையப்பர் ஆலயத்திலும், 4-6-2019 செவ்வாய் காலை 6.00 மணிக்கு பணிக்கன்குப்பம் புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும், சத்திய மங்கலம் புனித அந்தோணியார் ஆலயத்திலும் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.**

பிரிவால் துயருறும்
**மனைவி: மேரி ரோசாலி**
**சகோதரர்கள், சகோதரி**
**மற்றும் உறவினர்கள்.**
கடலூர்.

## விண்ணக வாழ்வின் 5-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்:17-07-1955



மறைவு: 04-06-2014

**அல்பேர் உஷாராணி (எ) கர்மேலா**

**தந்தாய் நானிருக்கும் இடத்திலே என்னிடம் ஒப்படைத்தவர்களும் என்னோடிருக்கும்படி விரும்புகிறேன் (அருளப்பர் 17:24)**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 4–6–2019 செவ்வாய் காலை 6.00 மணிக்கு நெல்லித்தோப்பு, புனித விண்ணரசி அன்னை ஆலயத்தில், நிறைவேற்றப்படும் திருப்பலியில் கலந்துக்கொண்டு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஜெபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
**கணவர்: எதுவார் அல்பேர்**
**மகன், மகள், மருமகள்,**
**பேரப்பிள்ளைகள்.**
நெல்லித்தோப்பு.

---

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்:03-03-1952



மறைவு: 05-06-2018

**A. ஜோசப் கசிமீர் ரத்னராஜ்**

**"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" யோவான்.11:25**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 05-06-2019 புதன் காலை 6.00 மணிக்கு இறையூர் புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலி யில் கலந்துகொண்டு ஜெபிக்க அன்புடன் அழைக்கிறோம்

பிரிவால் துயருறும்
**மனைவி, குடும்பத்தார்,**
**மற்றும் உறவினர்கள்**

நெல்லித்தோப்பு.

## விண்ணக வாழ்வின் 7-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்ந்தது: 04-05-1995



உதிர்ந்தது:31-05-2012

**S. அக்னல் ரெமிஜியஸ்**

**விண்ணக தந்தையே இறைவா! உமது அன்பு மகனாக, எங்கள் குடும்பத்தின் நேச முள்ள மகனாக, ஒளியாக, புன்னகை தவழும் முகமாக, பாசமிக்கவராய் எங்களை நேசித்து, எங்களுடன் வாழ்ந்து இப்பூவுலகைவிட்டு நித்திய சமாதானத்தில் இளைப்பாறும்படி இயேசுவே உம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட S. அக்னல் ரெமிஜியசின் ஆத்துமத்திற்கு நித்திய இளைப் பாற்றியைத் தந்தருளும் ஆமென்.**

பிரிவால் துயருறும்
**தாய், தந்தை, உற்றார்,**
**உறவினர்கள், அன்பு உள்ளங்கள்.**

**31–5–2019 கடலூர் திருப்பாப்புலியூர், புனித சூசையப்பர் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்படும்.**

## விண்ணக வாழ்வின் 2-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்:28-03-1976



மறைவு: 03-06-2017

**ஜூலியஸ் பால்ராஜ்**

**"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" யோவான்.11:25**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 03-06-2019 திங்கள் காலை 6.00 மணிக்கு இறையூர் புனித ஜெபமாலை அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலி யில் கலந்துகொண்டு ஜெபிக்க அன்புடன் அழைக்கிறோம்

பிரிவால் துயருறும்
**அம்மா, மனைவி, பிள்ளைகள், உற்றார்,**
**உறவினர் மற்றும் நண்பர்கள்.**
**எறையூர்.**

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

**"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (அரு.11:25)**











**தோற்றம்**
16-02-1926

**மறைவு**
07-06-2018

# திரு. செயின்ட் இயூபர்ட் சின்னப்பன்

**இரக்கமிகு இறைவா! நீர் இவ்வுலகிலிருந்து அழைத்துக் கொண்ட**

***செயின்ட் இயூபர்ட் சின்னப்பன்***

**அவர்களை நினைவு கூர்ந்தருளும். இவர் உம் திருக்குமாரன் சாயலைத்தாங்கி அவரோடு ஒன்றாய் இணைக்கப்பட்டது போல் உயிர்ப்பிலும் இருக்கச் செய்தருளும். எல்லா புகழும் மாட்சியும் என்றென்றும் உமக்கு உரியதே. - ஆமென்!**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 07-06-2019 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு புதுவை, நெல்லித்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும், காலை 6.15 மணிக்கு புதுவை, புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயத்திலும் நிறைவேற்றப்படும் திருப்பலியில் அன்னாரது ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
**மகன், மகள்கள்,**
**மருமகன்கள், பேரப்பிள்ளைகள்**
**கொள்ளுப்பேரப்பிள்ளைகள்.**
நெல்லித்தோப்பு, புதுச்சேரி.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

எடுத்துரைத்து, “**ஆகட்டும்**” என்ற மரியன்னையின் வார்த்தை யையே தமது விருதுவாக்காக கொண்டு வாழ்ந்த அவர் இன்று விண்ணிலிருந்து இங்குள்ள நம் அனைவரையும் ஆசீர்வதிக் கிறார் என்று தமது உரையை முடித்தார் பேராயர் அவர்கள்.

புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டம் சார்பாக உரையாற்றிய அருட்தந்தை **பிலோமின்தாஸ்** அவர்கள், இம்மணிமண்டபம் பேராயரின் வாழ்வை நினைவூட்டும் புத்தகம் போல் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று வாழ்த்தி, பேராயர் ஓர் சூழ்நிலை மேலாண்மை நிபுணராக விளங்கினார்; சூழலைக் கட்டுப்பாட்டுக்குள்வைக்கும் திறன் கொண்டிருந்தார், திட்ட மிட்டு துல்லியமாக செயல்பட்டார் என்றுரைத்த பின், அரசு சலுகை தலைமுறை பாகுபாடின்றி (irrespective of generation of con-version) SC கிறிஸ்தவர்களுக்கு கிடைக்கச் செய்தார் என்றும் சுட்டிக்காட்டினார். பங்குகளை பார்வையிடும் போது அனைத்து பதிவுகளையும் பார்வையிட்டார் என்றும், விளிம்பு நிலையினரோடு தன்னை ஒன்று படுத்தி பணிபுரிந்து வாழ்ந்தார் என்றும் வாழ்த்திய தந்தை அவர்கள், பேராயரின் இரு கனவுகளில் ஒன்று - மறைமாவட்ட மாமன்றம் - இன்று நம் மறை மாவட்டத்தில் இடம்பெறுகிறது என்று கூறி தம் உரையை நிறைவு செய்தார்.

தொடர்ந்து அருட்தந்தை R. **ஜோசப்ராஜ்** அவர்கள் மணிமண்டபம் கட்டதீர்மானிக்கப்பட்டது மற்றும் நிறைவேற்றப் பட்டது குறித்த நிகழ்வுகளைக் கூறி, நன்கொடையாளர்கள், மற்றும் பணிபுரிந்தவர்கள் அனைவருக்கும் நன்றி கூறி அனைவரையும் திருப்பலிக்கு அழைத்தார்.

கோவிலானூர் புனித கார்மேல் அன்னை ஆலயத்தில் நமது **பேராயர் மேதகு அந்தோணி ஆனந்தராயர்** அவர்கள் தலைமையில், வருகை புரிந்திருந்த அனைத்து ஆயர்களும், சுமார் நாற்பது குருக்களும் இணைந்து கூட்டுத்திருப்பலி நிறைவேற்றினர். திருப்பலிக்கு முன்னுரை நமது உயர் மறைமாவட்ட முதன்மைகுருபேரருள்திரு. **ஆ. அருளானந்தம்** அவர்கள் வழங்கினார். பேராயர் அவர்கள் அடிக்கடி கூறும் “பொன்னும் பொருளும் போகமும் அல்ல” என்ற பரிபாடலைச் சொல்லி, பேராயர் அவர்களின் அர்ப்பணம், பணி, ஏழைகளுடனான ஒருமைப்பாடு ஆகியவற்றைக் குறித்து உரையாற்றினார். திருப்பலி மறையுரையாற்றிய வேலூர் ஆயர் மேதகு சவுந்தர்ராஜ் அவர்கள், பேராயர் அவர்கள் தாம் பணியாற்றிய மண்ணின் மக்களை நேசித்து பணிபுரிந்தார் என்றும், வேலூரில் தலித் மக்களுக்காக ஆற்றிய பணிகளையும், தேவ அழைத்தல் உருவாக எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் கூறிய ஆயர் அவர்கள் மக்களுக்கு நிலையான வாழ்வு அமைய தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்தார் என்றுரைத்தார். திராட்சைச் செடி மற்றும் அதன் கிளைகள் பற்றிய உவமை பேராயர் அவர்களுக்கு பொருந்துவதாகக் கூறி பேராயரின் பண்புகளையும் பணிகளையும் விரித்துரைத்து, இவர் போன்ற நல்லவர்களால் இறைவன் நம் மத்தியில் வாழ்கிறார் என்று கூறி தம் மறையுரையை நிறைவு செய்தார் ஆயர் அவர்கள்.

திருப்பலிக்குப்பின் அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது. அனைத்து ஏற்பாடுகளையும் அருட்தந்தை R. ஜோசப்ராஜ் மற்றும் அவரது குடும்பத்தார் சிறப்பாக செய்திருந்தார்கள்.

“**ஆகட்டும்**” - “FIAT”

**இம்மண்ணில் திருச்சபைக்கும் அனைத்து மக்களுக்கும் தம்மையே அர்ப்பணித்து வாழ்ந்த பேராயர் S. மைக்கேல் அகுஸ்தீன் அவர்கள் விண்ணிலிருந்து இறைவன் அருளை நமக்குப் பெற்றுத் தருவாராக.** ●

*- ஆசிரியர்.*





**AUMONERIE CATHOLIQUE TAMOULE INDIENNE**

**இந்திய கத்தோலிக்கத் தமிழ் ஞானகம்**

**COMMUNAUTÉ TAMOULE DE GRIGNY**

*à l'occasion 25e anniversaire de l'activité de communauté tamoule de Grigny Le samedi 8 juin 2019 à 17h00 aura lieu une messe tamoule*



*Présidé par père JOHN KENNEDY*
*Notre Aumônier National*
*à l'élise Notre Dame de Toute Joie*
*Avenue des sablons 91350 GRIGNY CENTRE.*

*VENEZ TRES NOMBREUX*
*Accompagnes de vos familles, Amis pour prier et chanter en ce*
*JOUR DE FETE*

8 ஜுன் 2019 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கிரிஞ் தமிழ் பங்கின் 25 ஆண்டின் வெள்ளிவிழாவும் திரு இருதய ஆண்டவர் திருவிழா திருப்பலியும் நடைபெறும்.

இடம் : **சந்தோஷ அன்னை ஆலயம் 91350 கிரிஞ்**

**திரு இருதய ஆண்டவர் திருநாளைக் கொண்டாடும்**

அனைத்துக் குடும்பங்களும் ஒன்றிணைந்து திருப்பலியில் கலந்துகொண்டு, இறை அருளைப் பெற உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தொடர்புகளுக்கு**
**06 09 09 26 86**
**06 78 67 72 10**

இவண்
ஞானகத் தந்தை **ஜான் கென்னடி** - பாரிஸ்
தமிழ் திருவழிபாட்டு இறைமக்கள்
கிரிஞ்


**Published and Printed by** Fr.C.Antoni Roche **on behalf of Most Rev.** Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L., Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001. Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: **Rev. Fr. C.Antoni Roche.**